விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

Valampurii



**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 11 செவ்வாய்க்கிழமை (24.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126


ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில்

## சிவன் ஆலயத்தை இடித்து பௌத்த விகாரை அமைப்பு

முறைப்பாட்டையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தீவிர விசாரணை

(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத்தை இடித்து இராணுவத்தினர் பௌத்த விகாரை அமைத்தது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிர விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் ஒரு ஏக்கர் தனியார் காணியில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த மிகவும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத் 23

நீதிமன்றில் வழக்கு பதிவு செய்த போது

## கவனவீனமாக நடந்த பொலிஸ் மீது நீதவான் எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றில் வழக்குகளை பதிவு செய்யும் போது கவனவீனமாக நடந்து கொண்ட பொலிஸ் பொறுப்பதிகாரியை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் கடுமையாக எச்சரித்துள்ளார்.

நகர்ப்பகுதியில் உள்ள ஊடக நிறுவன ஒன்றுக்குள் புகுந்து ஊழியர் ஒருவரை தாக்கியதாக சந்தேகத்தின் பேரில் கடந்த வருடம் 2 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் அரச தரப்பாக மாறிய தாக தெரிவித்து அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் 7 நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று 23

எதிர்வரும் மே 8-ம் திகதி நாடாளுமன்றத்தில்

# இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உரை



புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் முக்கிய தகவல்களை வெளியிடுவார்

(கொழும்பு) இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முக்கிய உரையாற்றவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (23-ம் பக்.)

மேன்முறையீட்டு நீதிமன்ற

## நீதியரசர்களாக இருவர் நியமனம்

(கொழும்பு)

புதிதாக நியமனம் பெற்றுள்ள மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த உறுதியுரை நிகழ்வு இடம்பெற்றது. 24

விடுதலைப் புலிகள் பயன்படுத்திய

## நிலக்கீழ் பதுங்கு குழி ஒன்று கிளிநொச்சியில் கண்டுபிடிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பளை நகருக்கு அண்மித்த அரசர்கேணி பிரதேசத்தில் விடுதலை புலிகளின் நிலக்கீழ் பதுங்கு குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணி உரிமையாளர் காணியினை துப்புரவு செய்யும் பொழுது தொடர்ந்து 24

கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள்

## மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞன் ஸ்தலத்திலேயே பலி

யாழ்.நாவற்குழியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

அதிவேகத்துடன் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றொரு இளைஞர் கவலைக்கிட 24

## முல்லையிலிருந்து யாழ் வந்த சிறுமி ஒருவரை காணவில்லை

கடத்தப்பட்டதாக பொலிஸாரிடம் முறைப்பாடு



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த சிறுமி ஒருவரை காணவில்லை என கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முள்ளியவளை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 24

## இ.போ.ச சாரதி, நடத்துநர் மாணவன் மீது தாக்குதல்

வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் பாடசாலை மாணவன் ஒருவன் மீது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தின் சாரதி, நடத்துநர் மற்றுமொரு நபர் ஆகியோர் இணைந்து தாக்குதல் நடத்தி உள்ளனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பூவரசன்குளம் ஊடாக சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தின் சாரதி, நடத்துநர் ஆகியோரே தாக்குதல் நடத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்த 23

ஆனைப்பந்தி சந்தியில்

## துவிச்சக்கரவண்டி - டிப்பர் விபத்து; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டி மற்றும் டிப்பர் வாகனம் விபத்துக்குள் 23

நாடாளுமன்ற அமர்வு மே 8

## வர்த்தமானியில் ஜனாதிபதி ஒப்பம்

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வை வரும் மே 8 ஆம் திகதி நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பில் 23

ஹட்டன் - நோர்வூட் வீதியில்

## பேருந்து விபத்து 29பேர் படுகாயம்

(ஹட்டன்)

ஹட்டன் - நோர்வூட் பிரதான வீதியில் சாமிமலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று தியசிரிகம நிவ்வெளி பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. 24

யாழ். பல்கலை வவுனியா வளாகத்தில்

## சிங்கள மாணவர்கள் புத்தர்சிலை வைக்க முயற்சித்ததால் பதற்றம்

காலவரையின்றி வளாகம் மூடப்பட்டுள்ளது

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் சிங்கள மாணவர்கள் புத்தர் சிலை வைப்பதற்கு முயற்சி மேற்கொண்ட போது வளாக நிர்வாகம் அதனை தடுத்தமையால் பதற்ற நிலை நேற்றைய தினம் தோன்றியிருந்தது.

இதனையடுத்து யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. வவுனியா வளாகத்தின் பம்பைமடுவில் அமைந்துள்ள வியாபார கற்கைகள் பீடத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் 24

## அமைச்சர்களை குறைக்க ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்க 23

# நகர அபிவிருத்தி, மாநகர சபை கட்டடத்திற்கென ஒதுக்கிய நிதியினை வழங்கினால் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்–நகர முதல்வர் ஆர்னோல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர அபிவிருத்தி மற்றும் மாநகர சபை கட்டடத்திற்கென ஒதுக்கிய நிதியினை வழங்கும் பட்சத்தில் கட்டடம் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த மாநகர சபை தயாராக உள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது கடந்த ஆட்சிக் காலத்தில் மாநகரசபை அமைப்பதற்கான நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், சபையின் ஆட்சிக்காலம் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் கட்டடத்திற்கான வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இந்த நிலையில், தற்போது யாழ்.மாநகர சபைக்கான கட்டடத்தினை மீண்டும் கட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளீர்களா என கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

மேலும் கூறுகையில்,

யாழ். மாநகர் சபை கட்டடத்தினை மீண்டும் பழைய இடத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென எமது தேர்தல், விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளோம். நவீன வசதிகளுடன் தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசார பண்புகள் மாறாது கட்டுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்கப் பணிகள் நிறைவடைந்து விட்டன. மாநகர சபைக் கட்டடத்தினைக் கட்டுவதற்கு நகர அபிவிருத்தி அமைச்சினால் 1000 மில்லியன் ரூபாய் நிதி தருவதாக உறுதியளித்திருந்தனர்.

கட்டடத்தின் வேலைத்திட்டங்கள் நிறைவடைவதற்கு 1800 மில்லியன் ரூபாய் தேவை என உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதில் 1000 மில்லியன் ரூபா நிதியை நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் வட மாகாணசபை 500 மில்லியன் ரூபாயும் ஏனைய 300 மில்லியன் ரூபாவினை மாநகரசபையும் பொறுப்பேற்குமென்ற வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. குறித்தொதுக்கப்பட்ட நிதிகளை நகர அபிவிருத்தி அமைச்சும் வட மாகாணசபை மற்றும் மாநகர சபை உட்பட மாநகரசபையும் அந்த நிதிகளை இரண்டு கட்டங்களாக வழங்கவுள்ளன.

அவ்வாறு வழங்கப்படும் நிதிகளைக் கொண்டு மாநகரசபைக் கட்டடங்கள் 2 வருடங்களில் நிறைவு செய்யப்படும். இருப்பினும் இடையில் ஏற்பட்ட அரசியல் சலசலப்பு காரணமாக மாநகர சபை கட்டட வேலைத் திட்டங்கள் கிடப்பில் இருப்பதாக பொறுப்பேற்ற பின் அறிந்துள்ளேன்.

கட்டடத்திற்கான பூர்வாங்க வடிவமைப்பினைச் செய்த பின்னர் நகர அபிவிருத்திச் சபை கூறிய உத்தரவாதத்தினை வழங்கும் பட்சத்தில் மாநகர சபைக் கட்டடத்திற்கான ஆரம்ப பணிகளை ஆரம்பிக்க முடியும். நகர அபிவிருத்திச் சபை உத்தரவாதத்திற்கு அமைவாக மாநகரசபைக் கட்டடத்திற்கான வேலைத்திட்டங்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

## இசைச் சங்கமம் இன்று

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு கொக்குவில் ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பெருமஞ்சத்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் இசைச்சங்கமம் இன்று செவ்வாய்க் கிழமை இரவு 8 மணிக்கு தாவடி தெற்கு கொக்குவில் ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான முன்றலில் நடைபெறும். (ம)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள் -2016
வியாபார முகாமைத்துவமாணிக் கற்கை நெறி
(வெளிவாரி)

1. முதலாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை 2016
2. இரண்டாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை 2016
3. மூன்றாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை 2016

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மே மாத இறுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி
18.05.2018 ( வெள்ளிக்கிழமை ) ஆகும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர் 18.04.2018
(C-2378)



வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532



வேலையாட்கள் தேவை
லைடன் புடைவை நிலையத்துக்கு இரு விற்பனையாளர்கள் தேவை. பழகியவர்களும் பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. (பெண்கள்)
ஒரு ஆண் விற்பனையாளர் தேவை
(வயது :- 30-40)
● கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
(C-2383)
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



பொசிபிள் கிறீன் பிறைவேற் லிமிற்றட் – கிளிநொச்சி
கிளிநொச்சியில் இயங்கும் மூலிகைத் தேயிலை உற்பத்தி நிறுவனமொன்றிற்கு ஆவாரம் பூ ( ஆவரசம் பூ ) மற்றும் அறுகம்புல் தொகையாகத் தேவைப்படுகின்றன.
நியாயமான விலை தரப்படும்
தொடர்புகளுக்கு :-
076 9386017, 021 2283369
( கிழமை நாட்களில் காலை 9.30 - 4.30 வரை தொடர்பு கொள்ள முடியும்).
(C-2377)



வேலையாள் தேவை
Air ticketing அலுவலகத்திற்கு Marketing செய்யக்கூடிய வேலையாள் தேவை
(வேலை நேரம் 8 மணித்தியாலம். Week days)
021 222 9555
(C-2381)



அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்து

சைவசித்தாந்த பண்டிதர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவாகமபூசணம்
சிவஸ்ரீ.
தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்



நெல்லண்டை அம்மன் வீரமாகாளியம்மன் வட பத்திரகாளியம்மன் ஆதீனகர்த்தா அவர்கள் இன்று தனது அகவை நிறைவினை மனைவி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்கள்.
இறைபணியில் தன்னை அர்ப்பணித்துள்ள குருக்கள் ஐயா அவர்கள் நீண்ட ஆயுளுடன் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்பாளைப் பிரார்த்தித்து எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்த்தும்:
"சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு"
"பிரதிஸ்டா அலங்கார சித்தாந்த சாகரம்"
"பிரதிஸ்டா சிரோன்மணி"
"இந்துமதகுரு பீடாதிபதி"
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P
பிரதமகுரு வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
(சி-2379)



அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்து




சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ.தியாக.சோமாஸ் கந்தராஜாக் குருக்கள்
அவர்கள்
(B.A Dip.in.Ed, M.A)
பிரதியதிபர்,
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் ஆதீனகர்த்தா
0776202716

அன்னையவள் நெல்லண்டை பத்திரகாளித்
தாயின் அடிகளாய் சமேதனாகத்
துன்னிய பேரருளாளன் வீரபத்திரப்
பெருமான் அருளால் என்றும்
குன்றேபோல் செல்வமெலாம் குவித்துயரும்
நோயில்லா வாழ்க்கை கைகூடி
இன்னுமோர் நூற்றாண்டிங் கின்புடனே
அன்புடனே இவர்கள் வாழ்க வாழ்கவே

வாழ்த்தும் அன்பும் ஆதரவும் மறவாத அன்பு நண்பன்
சிவத்திரு.தம்பு இராமச்சந்திரன் தும்பளை மேற்கு, பிரத்தியங்கிராகாளி அம்மன் தேவஸ்தானம், தும்பளை, பருத்தித்துறை.
(சி-2382)

# நுணாவிலில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!

## 2 வீடுகள், 3 மோட்டார் சைக்கிள்கள் சேதம்; தொலைபேசிகள் திருட்டு







(படங்கள்:-ராகுலன்)

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் பகுதியிலுள்ள இரண்டு வீடுகள் மீது இனம் தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தி சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளனர்.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சென்ற 5 பேர் கொண்ட குழுவினர் அந்த வீட்டின் கதவுகளை வாளால் கொத்தியதுடன். ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்துவிட்டு சென்றுள்ளனர்.

பின்னர் அதே பகுதியில் உள்ள மேலும் ஒரு வீட்டுக்கு நேற்று அதிகாலை 5 மணிக்கு சென்ற 5 பேர் கொண்ட குழுவினர் வீட்டை வாள் மற்றும் பொல்லால் தாக்கி சேதப்படுத்தியதுடன் வீட்டில் நின்றிருந்த 3 மோட்டார் சைக்கிள்களை உடைத்து படுமோசமாக சேதப்படுத்தி, வீட்டில் இருந்த 2 தொலைபேசிகள், தலைக்கவசம் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர். ஆனால் இரு வீடுகளிலும் இருந்த நபர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் தப்பித்துள்ளனர். இந்த சம்பவம்குறித்துசாவகச்சேரிபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-9-89)

# நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்க கம்மன்பில கட்சி எதிர்ப்பு



(லண்டன்)

"நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு தமது கட்சி எதிர்ப்பினை வெளியிடுவதாக, பிவிதுரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஒன்றிணைந்த கூட்டணியானது இது தொடர்பில் அறிக்கை எதனையும் வெளியிடவில்லையென்று அந்தக் கட்சியின் ஊடகச் செயலாளர் துசார திசாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு முயற்சி எடுத்தால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், இது தொடர்பில் பிவிதுரு ஹெல உறுமய கட்சிக் கூட்டத்தில் தமது கட்சியின் உறுதியான நிலைப்பாட்டை தெளிவுப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி நாடு திரும்பினார்



(கொழும்பு)

பொதுநலவாய அரசத்தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கடந்த 15 ஆம் திகதி லண்டன் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் பாரியார், ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வைத்தியர், அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அவரது பாரியார், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட பலர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தெற்கு ஆசியாவிலேயே 24 மணிநேரத்திற்குள் மின்சாரம் வழங்கும் ஒரே நாடு இலங்கையாம்



(கொழும்பு)

தெற்கு ஆசியாவிலேயே 24 மணிநேரத்திற்குள் மின்சாரம் வழங்கும் ஒரே நாடு இலங்கை மட்டும் தான் என மின்வலு மற்றும் மீள் புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## சீனாவின் பட்டுப் பாதைக்கு ஆதரவு

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கைக் கடற்படைக்கே

## பிரதமர் ரணில் உறுதி



(கொழும்பு)

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவ, பாதுகாப்பு நோக்களுக்காக பயன்படுத்தலாம் என வெளியாகும் கருத்துக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பொன்றின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவ மயப்படுத்தவில்லை. அந்த துறைமுகத்தின் பாதுகாப்பிற்கு இலங்கைக் கடற்படை மாத்திரமே பொறுப்பு என பிரதமர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் புதிய பட்டுப் பாதை திட்டத்தை தான் முழுமையாக ஆதரித்துவருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவத்தை வழங்குகின்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கப்படும் திட்டங்களைத் துரிதப்படுத்தவும் சீனாவின் முதலீட்டை மேலும் பெற்றுக்கொள்வது குறித்தும் இலங்கை அரசாங்கம் ஆர்வமாகவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனே தொடர்வார்

## அசாத் சாலி உறுதி




(கொழும்பு)

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனே வகிக்க வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார். இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வாக்கு கேட்ட யாரும் எதிர்க்கட்சித் தலைவராக முடியாது எனவும் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பு - செட்டியார் தெருவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழ்-சிங்கள புத்தாண்டு நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அசாத் சாலி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொல்லப்பட்டதையடுத்து தேர்தல் முறை மாற்றப்பட்டதாக தெரிவித்த அசாத் சாலி, தற்போது கொழும்பு மாநகர சபையில் தெரிவானவர்களுக்கு ஆசனங்கள் இல்லை எனத் தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்



## நடராசா இராமநாதன்

(வட்டூர் தவில் வித்துவான், தவில் அரசு, இசைமணி)

பிறப்பு
23.04.1956

இறப்பு
23.04.2018

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராமநாதன் நேற்று (23.04.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகரத்தினம், அமரர் முத்துலட்சுமி, அமரர் முருகானந்தம், சுந்தராம்பாள், இராசேஸ்வரி, அமரர் சரஸ்வதி, லட்சுமி அம்மா, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்சன், தர்சீலன், தர்சணன், தர்சராகவன், சிவசாகித்தியன், குகவர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சாயகி, கயிதா ஆகியோரின் அன்பு மாமனும் பத்மப்பிரியன், பானுப்பிரியன், ராகவர்த்தனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.04.2018) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3735)

அடைக்கலம் தோட்டம்
கந்தசாமி கோயிலடி
வட்டு தெற்கு. மாவடி, வட்டுக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்
தொ.பே: 077 491 4179, 077 935 3185, 077 757 9326

# கேள்வி அறிவித்தல்

## கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு

தலைவர் மாவட்ட பெறுகைக்குழு/மாவட்ட உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கீழ் உள்ள கமநல சேவைகள் நிலையங்களின் மீள் நிர்மாணம், குளங்கள் மற்றும் கமப்பாதைகளுக்கான வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

- நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.
- இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
- நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கபடும்.
- ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

1. விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப் பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு** எனும் முகவரியில் 23.04.2018 தொடக்கம் முற்பகல 9.00 மணியிலிருந்து மாலை 2.30 வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிகதகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநலஅபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 23.04.2018 முதல் 15.05.2018 வரை வேலை நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளளாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 15.05.2018 ஆம் திகதியன்று பி.ப 01.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப் பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 15.05.2018ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி (Original) தனியாகவும் நகல் (copy) தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப் படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணைபொறுப்பு (Bid Security) 15.08.2018ம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
8. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் Bid உடன் இணைக்கவும் இணைக்காத பட்சத்தில் VAT கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.
9. கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான உங்களுடைய வாகன தகவல், வங்கி கணக்கு அறிக்கை, கடந்த கால வேலை விபரங்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் வரி நீங்கலாக) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | வேண்டப்படும் ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | MU/DAD/ Ten.Buil/ 2018/39-01 | பாண்டியன் குளம் கமநல சேவைகள் நிலையம். | 4.23Mn | | | 45,000.00 | பாண்டியன்குளம் |
| 2 | MU/DAD/ Ten.Buil/ 2018/39-02 | குமுழமுனை கமநல சேவைகள் நிலையம். | 4.28Mn | 15/8/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 45,000.00 | குமுழமுனை |
| 3. | Mu/DAD/ Tender/ 2018/39-07 | உம்மட்டியா கமப்பாதை | 4.24Mn | | | 43,000.00 | பாண்டியன்குளம் |
| 4 | Mu/DAD/ Tender/ 2018/39-08 | உம்மட்டியா குளம் | 4.17Mn | | | 43,000.00 | பாண்டியன்குளம் |

(C-2380)

**தலைவர்,**
மாவட்ட பெறுகைக்குழு,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு.

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி.
# உமாதேவி நடராசா

(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

திதி: 24.04.2018



**தோற்றம்: 1951.10.29 மறைவு: 2007.04.25**

நிலையில்லா இவ்வுலகில்
விதியை வென்றவர் யாருமில்லை
அன்பின் மதிமுகம்
சிரிப்பில் செல்வச் செழிப்பு
பேச்சில் தேனமுதம்
இப்படி எம் வாழ்வின்
அத்தனையுமாய் இருந்த உமை

எப்படி இழக்க மனம் வரும்
இருப்பினும்...
விதியை நொந்து கொண்டு
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
ஆண்டுகள் பதினொன்றல்ல
பதினோராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
அகலாது உம் அன்பு முகம்.

(3670

துயருறும்- கணவர் சி.நடராசா (ஓய்வுபெற்ற அதிபர்). திருமதி.Dr.அனுஷா யோகநாதன் (பெறாமகள் - தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை). மருமகன் Dr. தி.யோகநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர்-யாழ்.மருத்துவபீடம்). ஆருஷன் மற்றும் அக்ஷயா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை). தனம்செயன். லெசிதா (பேரப்பிள்ளைகள்). புஷ்பா-சந்திரகுமார். சுசீலா-சுப்பிரமணியம். பிறேம்குமார் (கேரளா). அண்ணன்மார். அண்ணிமார். மச்சான்மார்-மருமக்கள் ருசாந்தினி (லண்டன்). சர்மிலி (உதவிப் பிரதேச செயலர். புதுக்குடியிருப்பு). மிலோஜனா. கோபிதா. பிரமிலி. கண்ணன். விதிர்தன். திவ்வியன். முகிலவன். பெறாமக்கள் (ஜெயம் பவா-லண்டன்). சிவம் (பபி-கனடா). அனுசியா (விபுலானந்தா இசைக் கல்லூரி-மட்டக்களப்பு). திகளொளி சிவரதன். தயரதன். கஜீவன். மிலக்சன்.

## கடவுச் சீட்டு தரப்படுத்தலில் இலங்கைக்கு 94வது இடம்
## முதலிடத்தில் சிங்கப்பூர்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் 199 நாடுகளுக்கு இடையிலான, கடவுச் சீட்டு தரப்படுத்தலுக்கு அமைய இலங்கை 94 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

39 புள்ளிகளைப் பெற்று பங்களாதேஷ், ஈரான் மற்றும் எரிட்டேரியா ஆகிய நாடுகளுடன் 94 ஆவது இடத்தை இலங்கை கடவுச் சீட்டு பகிர்ந்து கொண்டுள்ளது.

இந்தப் பட்டியலில், சிங்கப்பூர் 164 புள்ளிகளுடன் முதலிடத்திலும் 163 புள்ளிகளுடன் தென்கொரியா இரண்டாம் இடத்திலும், ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் 162 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

நாடுகளின் திறந்த விசா (visa-free) கொள்கையை அடிப்படையாக வைத்து இந்தத் தரப்படுத்தல் வெளியிடப்படுவதோடு passportindex.org என்ற நிறுவனம் இந்தத் தரப்படுத்தலை வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த 199 நாடுகளின் கடவுச் சீட்டுகள், 100 இடங்களுக்குள் தரப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

## விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கொங்கிறீட் தரையில் வீழ்ந்து மரணம்

(கொழும்பு)

புத்தளம்- கந்தத்தொடுவாய் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த 7 வயதுடைய சிறுவன் ஒருவர் கொங்கிறீட் தரையில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், உயிரிழந்தவர் 7 வயதுடைய சசிந்து ஆலோக என்ற சிறுவனே என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவன் பக்கத்து வீட்டைச் சேர்ந்த மற்றொரு சிறுவனுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும் இதன்போது குறித்த சிறுவன் அவ்வீட்டில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த சுமார் மூன்று அடியளவு உயரமுள்ள இடத்தில் இருந்த கொங்கிறீட்டில் ஏறி விளையாடிக் கொண்டிருந்த போது திடீரென தவறி கீழே வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் உடனடியாக சிறுவன் முந்தல் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்த காரியமொன்று இன்று கைகூடும், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், உஷ்ண சம்பந்தான ரோக பயமுண்டு.

**இடபம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வம்பு வழக்குகள் சாதகமாக அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசிச் சமாளிப்பீர்கள், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக். | |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம், உத்தராடம் மாலை 5.15 மணிவரை சிங்--சந் | | சந். ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | | குரு | |

**24.04.2018**

சித்திரை 11, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
நவமி பிற்பகல் 2.02 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 5.22 மணிவரை
சுபநேரம் 11.30-12.00 மணிவரை
இராகுகாலம் 3.00-4.30 மணிவரை

**வளவன்**

**கடகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்; கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், புதிய முயற்சிகள் முன்னேற்றம் தரும், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு.

**துலாம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் ஊக்கத்துடன் ஈடுபடுவீர்கள், முயற்சிகள் முன்னேற்றம் தரும்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# ஓர் ஆன்மாவின் சிவயோக யாத்திரை

**பண்டிதர் மூதறிஞர்,. கலாநிதி சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள் வீடுபேறடைந்து 3 ஆவது ஆண்டு 25.04.2018 அன்று நினைவு கூரப்படுவதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



25.04.2015 அன்று அதிகாலை 2.30 மணிக்கு வைத்தீசுவரக்குருக்களது ஆன்மா சிவலோகத்திலுள்ள சிவயோக சுவாமிகளின்திரு மட நிழலில் இளைப்பாறச் சென்றது. இப்பூவுலகில், காரைநகரில், கந்தரோடையில் நம் மத்தியில் வாழ்ந்த மகான். வசிட்ட மகரிஷியாக விளங்கிய புண்ணிய ஆத்மாவின் வாழ்வு எண்ணுதற்கரியது.

வைத்தீசுவரக்குருக்கள் வாழ்வு தரும் செய்தி

அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ள 32 வகை அறங்களைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்து ஒழுகு தலைப் பெரும்பேறெனக் கருதினார். பறவைகள், விலங்குகள் போன்ற வாயில்லா சீவராசிகள் தாகம் தீர்த்துக் கொள்ள வீட்டிலே முற்றத்திலும் கோடியிலும் பாத்திரங்களில் நீர் நிரப்பி வைத்தார். வட்டுக் கோட்டையில் இருந்த போது பாடசாலைக்குச்செல்கின்ற பிள்ளைகள் மற்றும் வழிப்போக்கர்கள் தாகம் தீர்த்துக்கொள்ள முற்றத்திலே வாளியில் தண்ணீர் நிரப்பிவைத்தார். எப்போதும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

எல்லா மனிதர்களிலும் அன்பு பூண்டு ஒழுகி, தன்னிடம் நூல்கள் கேட்டு வருவோருக்கும் சந்தேகம் கேட்டு வருவோருக்கும் அறிவுப்பசியையும் வயிற்றுப் பசியையும் தீர்த்து உவகையடைந்தார். தந்தையைப் பின்பற்றி வாழும் நன்மக்களைப் பெற்று திருவாசக பாராயணஞ்செய்து, சகலாகலாவல்லிமாலை பாடி, அபிராமி அந்தாதி பொருளுணர்ந்து ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமான் பதத்தே உருகிபாதத்திலே மனம் பற்றி வியாவில் பதியுறை ஐயனாரிடம், ஞானபண்டித இரட்சகர் மகாராணி சோமசேகரம் அவர்களிடம்தான் சேகரித்த நூல்களைக் காணிக்கையாக்கி, எனக்குள்ள எல்லாம் அன்றே உனதென்று அளித்து விட்டேன் என்று கூறி தில்லைக் கூத்தப்பிரான் திருவடிகளில் பேரானந்தப் பெருவாழ்வு எய்தினார்.

ஈழத்துச் சிதம்பரத்திற்கு தமிழக அறிஞர்களை அழைத்து திருவாசக விழா என்ற பெருவிழா நடத்துகின்ற போது அறிஞர்க்கெல்லாம் உணவும் தேநீரும் கொடுத்து உபசரித்து பேருரைகளைக் கேட்டு மகிழ்ந்து காரை நகருக்குப்பெருவாழ்வு தந்தார்.

சிவயோக யாத்திரை

தனது 99 ஆவது வயதிலும் தனது ஆடைகளைத் தானே சவர்க்காரம் இட்டு, தேய்த்து, நீரிலே கழுவி, உலர்த்திவந்தார். 2015சித்திரைப் புத்தாண்டு பிறந்த உடன் தன்னை சிவயோக யாத்திரைக்குத் தயார் செய்வதில் ஈடுபட்டார். இறுதியாக செவ்வாய்க்கிழமை (21.04.2015) உணவருந்திய பின்னர் இறுதி 3 நாள்களும் உணவருந்தவில்லை. 23.04.2015 புதன்கிழமை நள்ளிரவு 1.00 மணிக்கு நீராடித் தனது ஆடைகளைத் தானே தோய்த்து உலர்விட்டார். சுவாமி அறைக்குச் சென்று தூபம்காட்டி இறைவனை வழிபட்டார். பிள்ளைகளிடம் வந்து யோகர் சுவாமிகளிடம் செல்லப் போகின்றேன் என்று கூறினார். பிள்ளைகளும் நித்திரை இன்றி தந்தையுடன் உடன் இருந்தார்கள். தான் எங்கு இருக்கின்றேன் என்று மகள் இராணியைப்பார்த்துக் கேட்டார். வீட்டில் தான் இருக்கின்றீர்கள் என்றார் மகள். நான் இப்போது யோகர் சுவாமியின் மடத்திலே இருக்கின்றேன். உனக்கு விளங்காது என்றார். யாழ்ப்பாணத்து யோகர்சுவாமிகள்நித்தியமாய் வாழும் சிவயோகமடத்துக்குப் புறப்படத் தயாரானார்.

வெள்ளிக்கிழமை மாலை பிள்ளைகள் கேட்டுக் கொள்ள ஒரு குவளை பால் அருந்தினார். இரவு 10.00 மணிக்கு துவாரகனிடம்போகப் போகிறேன் என்று மகளிடம் கேட்டார். ஓட்டோ ஓடும் சிறியை கூப்பிடச் சொன்னார். துவாரகனுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கச் சொன்னார். இரவு 10.00 மணியாகிவிட்டது என்றுமகள் கூற, நாளைக்கு நீயே எடுத்துச் சொல்லுவாய் என்றார். 25.04.2015 சனிக்கிழமை அதிகாலை 2.30 யாழ்ப்பாணத்தில் மெல்லிய புயற்காற்று வீசியது. சிவனே சிவனே என்றார்.

இல்லற ஞானி, சீவன் முத்தர்

வைத்தீசுவரக் குருக்கள் தன் பிள்ளைகளையும் அன்பர்களையும் ஆபத்பாந்தவனாகக் காத்துவருகிறார். திருவாசகத்தைப் பொருளுணர்ந்து ஓதினால் முத்தி கிடைக்கும் என்ற செய்தியை எமக்கு விட்டுச் சென்றார். நினைக்க முத்திதரும் தலமாக விளங்குகின்றார்.

**பா.துவாரகன்**

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும்சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.


இப்போட்டி தரம் 1,2 பாலர் பிரிவிலும் தரம் 3,4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "மாசில் வீணையும்மாலை மதியமும்" "சொற்றுணைவேதியன்சோதி வானவன்" ஆகிய இரு திருமுறைகளும் கீழ் பிரிவிற்கு "கூற்றாயினவாறு விலக்ககிலீர்", "நிலைபெறுமா றெண்ணுதியேல்" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதியாகும். பரிசில்கள் எதிர்வரும் மே 9ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 3.30 மணி முதல் 6 மணிவரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும் பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ)

# சந்தையின் குறைபாடுகள தொடர்பாக பிரதேச சபையினர் நேரில் ஆராய்வு



(குரணவாய்)

வடமராட்சி மானாண்டிச் சந்தையின் குறைபாடுகள் தொடர்பில் பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் வியாபாரிகளுடனும் கலந்துரையாடினார்.

மானாண்டிச் சந்தையின் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த வியாழக்கிழமை நண்பகல் பிரதேச சபையின் தவிசாளர் அ.சா. அரியகுமார், உப தவிசாளர் தினேஸ், பிரதேச சபையின் உறுப்பினர் தவயோகன் ஆகியோர் நேரடியாகச் சென்று குறைபாடுகளை ஆராய்ந்தனர்.

அங்குள்ள தண்ணீர் தாங்கிக்கு மோட்டர் அமைத்தல் மற்றும் வியாபாரிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து வியாபாரிகளால் தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பில் பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-60)

# யாழில் கஞ்சா விற்றுவிட்டு தலைமறைவான நபர் ஏறாவூரில் ஹெரோயினுடன் கைதாகி மறியலில்!

(குரணவாய்)

வடமராட்சிதேவரையாளிப் பகுதியில் கஞ்சா கடத்தலில் ஈடுபட்டுதலைமறைவாக இருந்த பிரதான சந்தேக நபர் ஏறாவூர் பகுதியில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவரையாளிப் பகுதியில் கடந்த முதலாம் திகதி கஞ்சா கடத்தல் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்துஅங்கு பொலிஸார் சென்றபோது 10 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டது டன் நால்வர் கைது செய்யப் பட்டனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தப்பியோடி தலைமறைவாக இருந்தார்.

இந்நிலையில் கடந்த 14.04.2018 அன்று ஏறாவூர் பகுதியில் ஹெரோயினுடன் அவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் மட்டக்களப்பு மாவட்ட நீதவான் மாணிக்க வாசகர் கணேசராசா முன்னிலையில் முற்படுத்தப்பட்டு நெல்லியடிப் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டார்.

பொலிஸார் அவரை கடந்த புதன்கிழமை (18.04.2018) பருத்தித்துறை நீதவான் திருமதி நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 26.04.2018 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)






பாழ்நீரிழிவுக் கழகத்தினரால் அண்மையில் அச்சுவேலி பேருந்து நிலையத்தில் நடத்தப்பட்ட நீரிழிவு நோயாளரை இனங்காணும் மருத்துவ முகாமின் போது...

# தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் மானியத்திட்ட காசோலை கையளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையினது யாழ்.பிராந்திய காரியாலயமானது கடந்த வருடங்களைப் போல இவ் வருடமும் பல மானிய மற்றும் கடன் திட்டங்களையும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களையும் வெற்றிகரமாக முன்னகர்த்தி வருகின்றது.

அந்த வகையில் 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய மானியத்திட்டங்களில் பங்குபற்றியோருக்குரிய காசோலைகள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (இ)



# ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின்

# பெருமஞ்சத் திருவிழா - 24.04.2018

**நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கும் இன்னிசை இசைச் சங்கமத்தில் செவிக்கும், விழிக்கும் இன்பமுற வாரீர்**

கொழும்பு **சித்தாரா** இசைக்குழுவினரின் இசையில் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியின்
புகழ் பூத்த பாடகர்கள் **சாய்சரண், ஸ்ரீநிவாஸ்** மற்றும் இவர்களுடன்
பிரபல தென் இந்திய திரைப்பட பின்னணிப் பாடகர்கள்
**ஸ்ரீ மதுமிதா** மற்றும் **லதா கிருஷ்ணா** ஆகியோர் கலந்து சிறப்பிக்கும்

# இசைச் சங்கமம்

**இடம்** : ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான முன்றலில்
(தாவடி தெற்கு, கொக்குவில்.)

**காலம்** : இன்று 24.04.2018 செவ்வாய்க்கிழமை

**நேரம்** : இரவு 8.00 மணிக்கு



## அனைவரும் வருக அனுமதி இலவசம்.

**பிரதான அனுசரணையாளர்கள்:**

**விஜிதா அரிசி ஆலை**
தாவடி

**தேனு களஞ்சியம்**
திருநெல்வேலி

(C-2371)

## கரைச்சி பிரதேச சபை

# கன்னி அமர்வில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை பிரதேச சபை பொறுப்பேற்று நிர்வகிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் கரைச்சிப் பிரதேச சபையினூடாக நடைமுறைப்படுத்த வேண்டும் என கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் முதலாவது கன்னி அமர்வு நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை ம்ண்டபத்தில் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன். கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கான பொதுநூலக காணி விடுவிக்கப்பட்டு நவீன வசதிகள் கொண்ட பொது நூலகம் அமைக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே ஒருங்கிணைவுக்குழுவின் தீர்மானங்களுக்கு அவைமாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை பிரதேசசபை பொறுப்பேற்று நிர்வகிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், அது நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் பிரதேச சபையின் ஊடாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழி முதல் மொழியாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும்.

மற்றும் கரைச்சிப்பிரதேச சபையின் உப அலுவலமாகக் காணப்படுகின்ற கண்டாவளை தனிப் பிரதேச சபையாக உருவாக்கப்பட வேண்டும். ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய வேண்டும் என மேற்படி நான்கு தீர்மானங்களும் கன்னி அமர்வில் கொண்டுவரப்பட்டுள்ளன. (2-315)




# ஆனந்த சுதாகரனை வெசாக் தினத்தில் விரைந்து விடுதலை செய்ய வேண்டும்

## கரைச்சி பிரதேசசபை கன்னி அமர்வில் தீர்மானம்

(கண்டாவளை)

சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆனந்த சுதாகரனை விரைந்து நடவடிக்கை எடுத்து வெசாக் தினத்திலாவது விடுதலை செய்யுமாறு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கன்னி அமர்வில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குத்தெரிவாகிய உறுப்பினர்களின் முதலாவது கன்னி அமர்வு நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கரைச்சிப்பிரதேச சபை மண்டபத்தில் கரைச்சிப் பிரதேச சபையினுடைய தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றுள்ளது. இதன்போதே மேற்படி தீர்மானம் கொண்டுவரப்பட்டது.



மேற்படி அமர்வில் சிறையில் தடுத்து ஆயுள் தண்டனைக் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆனந்த சுதாகரின் மனைவி உயிரிழந்த நிலையில் அவரது இரண்டு பிள்ளைகளும் பெற்றோரின் அரவணைப்பற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தாயின் அரவணைப்பை இழந்த பிள்ளைகளுக்கு தந்தையின் அரவணைப்பு கிடைக்கும் வகையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய வேண்டுமென பிரதேசசபை உறுப்பினர்களான ஐயம்பிள்ளை அசோக்குமார், விக்ரர் சாந்தி ஆகியோர் தீர்மானத்தைக்கொண்டு வந்தனர். (2-315)

# ஆற்று மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரங்கள் கைப்பற்று

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 18 மணி நேரத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த, இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதன் சாரதிகள் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர்.விமல குணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 6 மணி வரையிலான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தருமபுரம் பொலிஸார் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது, தருமபுரம் 5 யூனிட் கிராமக் குடியிருப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த உழவு இயந்திரத்தை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது. அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை ஏற்றி பயணித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை. தருமபுரம் நெத்தலியாற்றுப் பகுதியில் வீதிப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அனுமதிப் பத்திரமின்றி ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

## ஒரு வருட நிறைவை முன்னிட்டு

# 50மீன்பிடி படகுகளில் புறப்பட்டு சென்று இரணைதீவு மக்கள் கண்டனப் பேரணி








(கண்டாவளை)

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட இரணைதீவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி முன்னெடுத்துவரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் இரணைதீவு மக்களால் நேற்று கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரணைதீவு பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி அம்மக்களால் முனனெடுக்கப்படும் தொடர் போராட்டத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுக் காலை கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி இரணைதீவு பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி மக்களால் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் எதிர்வரும் முதலாம் திகதியுடன் ஒரு வருடத்தை நிறைவு செய்கின்றது.

இதுவரை தீர்வு எதுவும் வழங்கப்படாத நிலையில் தமது கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் குறித்த மக்களால் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரணை மாதா நகரில் இருந்து சுமார் 50 மீன்பிடி படகுகளில் இருந்து புறப்பட்ட மக்கள் இரணைதீவு கரையை அண்டி தமது கண்டனப் பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

இரணைதீவும் எமது வளங்களும் எம்மைவிட்டுப் பறிபோகும் மிக ஆபத்தான நிலை உருவாகியுள்ளது.

அந்த வளங்கள் எமது மக்களால் பராமரிக்கப்படாமல் இருப்பதாலும் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அங்கு நாம் மீள்குடியமர வேண்டிய மிக அவசர தேவை எழுந்துள்ளது" என்று இரணைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# வவுனியாவில் புதையல் தோண்டிய மூவர் பொலிஸாரால் கைதாகினர்

## இருவர் தப்பியோட்டம்

(குருமன்காடு)

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்டிய 5 பேரில் மூவரை கைது செய்துள்ளதாகவும் இருவர் தப்பி ஓடிவிட்டதாகவும் ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஈச்சங்குளம் தவசியார் குளம் வயல் பகுதியை அண்மித்த காட்டுப் பகுதியில் புதையல் தோண்டுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அப்பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்தனார்.

இதன்போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் ஓமந்தை, கிளிநொச்சி, தேவ குளம் பகுதிகளைச் சேர் ந்தவர்கள் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இதேவேளை இருவர் தப்பியோடியுள்ளதாகவும் தப்பி ஓடியவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி, அலவாங்கு, சவள் போன்றவற்றை கைப்பற்றியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் ஈச்சங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# உடையார்கட்டு ம.வித்தியில் சித்திரை புத்தாண்டு விழா

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான சித்திரைப் புத்தாண்டு விழா நாளை புதன்கிழமை காலை மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது, பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# 312 மில்லியன் ரூபா நிதி
# 16 ஆயிரத்து 504 விவசாயிகளுக்கு உரமானியத்திற்காக வழங்கல்

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தாண்டு கால போக செய்கையில் ஈடுபட்ட பதினாறாயிரத்து 504 விவசாயிகளுக்கு 312 மில்லியன் ரூபா நிதி உரமானியத்திற்காக வழங்கப்பட்டுள்ள தாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆய்குலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ம ாவட்டத்தில் கடந்தாண்டில் மேற்கொள்ளப்பட்ட காலபோக செய்கைகளுக்கான உரமானியக்கொடுப்பனவுகள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் வங்கிகளினூடாக வழங்கப்பட்டன.

இது தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிக்கையில், கடந்தாண்டு காலபோகச் செய்கையில் ஈடுபட்ட பதினாறாயிரத்து 504 விவசாயிகளுக்காக அவர்கள் மேற்கொண்ட 24 ஆயிரத்து 980 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கைகளுக்கு 312.257 மில்லியன் ரூபா உரமானியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் வங்கிகளால் 43 பேருக்கு 66.2 ஹெக்டேயருக்கான கொடுப்பனவுகள் எட்டு இலட்சத்து 500 ரூபா பணம் மட்டுமே வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர் கடந்த 2017 ஆம் ஆண்டில் மேற்கொண்ட சிறுபோக நெற்செய்கைகளுக்காக ஆயிரத்து 621.5 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொண்ட இரண்டாயிரத்து 520 விவசாயிகளுக்கு 20 மில்லியன் ரூபா நிதி உரமானியக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கைகளுக்கான உரமானியம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் மேற்படி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். (2-315)

# கால்நடைகள் கூட்டத்தீர்மானத்திற்கு அமைவாக கட்டுப்படுத்தப்படவில்லை
## சிறுபோகச்செய்கை அழிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் கீழ் 95 வீதமான சிறுபோக பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும், கூட்டத்தீர்மானத்திற்கமைவாக இதுவரை கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக குளங்களின் நீர்மட்டம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

இரணைமடுக்குளத்தின் நீரின் அளவைக்கொண்டு ஆயிரத்து 612 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 300 ஏக்கரில் சிறுதானிய செய்கையும் மேற்கொள்வது என கடந்த மார்ச்மாதம் 19 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்று முடிந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு தற்போது 95 வீதமான சிறுபோக பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிலையில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டும் உரிய அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளபோதும், கால்நடைப்பண்ணையாளர்கள் கால்நடைகளை கட்டாக்காலிகளாகவே திறந்து விட்டுள்ளனர்.

இவ்வாறு விடப்பட்டுள்ள கால்நடைகள் சிறுபோக பயிர்ச்செய்கைகளை அழித்துச்சேதப்படுத்தி வருகின்றன என்றும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# செயலிழந்துள்ள ஏழு ஏற்று நீர்ப்பாசன திட்டங்களை மீளவும் புனரமையுங்கள்
## விவசாயிகள் கோரிக்கை

(மல்லாவி)

வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட வவுனிக்குளத்தின் நீரைப் பயன்படுத்தி முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தில் வவுனிக்குள குடியேற்ற திட்டத்தில் உள்ள மக்களின் மேட்டு நிலக் காணிகளில் உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட 10 ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களில் 03 திட்டங்கள் மட்டும் புனரமைப்புச் செய்யப்பட்ட நிலையில் மீதி 07 ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களும் செயலிழந்து காணப்படுவதால் மீளவும் அதனைப் புனரமைப்புச் செய்து தருவதன் ஊடாக தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ள தமக்கு உதவிட வேண்டும் என துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் விவசாயிகள் மத்திய, மாகாண அரசுகளிடம் தமது கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தில் வவுனிக்குளத்தின் நீரைப் பயன்படுத்தி ஆரம்பித்து வைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் வவுனிக்குளம் வலது கரை நீர்ப்பாசனக் கால்வாய் ஊடாகச் செல்லும் நீரைப் பயன்படுத்தி பாலி நகரில் 87 ஏக்கரிலும் யோகபுரம் கிழக்கில் 65 ஏக்கரிலும் பாரதி நகரில் 85 ஏக்கரிலும் திருநகரில் 75 ஏக்கரிலும் விளநகரில் 110 ஏக்கரிலும் புகழேந்தி நகரில் 50 ஏக்கரிலுமாக மொத்தம் 472 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதேபோன்று, வவுனிக்குளம் இடது கரை நீர்ப்பாசனக் கால்வாய் ஊடாக செல்லும் நீரைப் பயன்படுத்தி கரும்புள்ளியான் 50 ஏக்கரிலும், பாண்டியன் குளம் பிள்ளையார் கோவிலடி 110 ஏக்கரிலும் பாண்டியன் குளத்தில் 80 ஏக்கரிலும் விநாயகபுரத்தில் 180 ஏக்கரிலும் செல்வபுரத்தில் 50 ஏக்கரிலுமாக மொத்தம் 495 ஏக்கரிலுமாக 10 நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் தமது மேட்டு நிலக் காணிகளில் உப உணவுப் பயிர் செய்கையுடன் வான் பயிர்களான தென்னை, மா, பலா போன்ற பயன் தரும் மரங்களை நாட்டி பயன் பெற்றனர்.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட நிலையில் செயலிழந்து விட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டில் புகழேந்தி நகர், பாண்டியன் குளம், விநாயகபுரம், செல்வபுரம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் மட்டும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வடக்கு மாகாண சபை என்பனவற்றின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள 07 ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களும் செயலிழந்து காணப்படுவதால் மீளவும் அதனைப் புனரமைப்புச் செய்து தருவதன் ஊடாக தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ள தமக்கு உதவ வேண்டும் என இத்திட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கோரிக்கையை விடுத்துள்ளனர். (2-15)


# முதற்கட்டமாக 27 மில்லியன் ரூபாவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு
## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத் தகவல்படி

(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தின் கமநலஅபிவிருத்தி திணைக்களத்தினூடாக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினூடாக பல்வேறு அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு முதற்கட்டமாக 27 மில்லியன் ரூபாவிற்கான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்காக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினூடாக இவ்வாண்டு 50 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் இதற்கான மதிப்பீடுகள் அனைத்தும் தயாரித்து வழங்கப்பட்டு இதில் முதற்கட்டமாக 27 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டு அதற்கான வேலைகள் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாண்டில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு இதுவரை 132.6 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இருபதாயிரம் மனித நாட்களில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கவும் அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# விவசாய உபகரணத் தொகுதிகள் 50 விவசாயிகளுக்கு வழங்கல்



(குருமன்காடு)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப. சத்தியலிங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

விவசாயத் திணைக்களத்தினூடாக ஏழு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியில் நேற்று வழங்கி வைக்கப்பட்ட விவசாய உபகரணத்தொகுதிகளை 50 விவசாயிகள் பெற்றுக்கொண்டனர்.

மருந்து தெளிக்கும் கருவி, நீர் இறைக்கும் இயந்திரம், முள்ளுக்கம்பி, சீமெந்துபக்கெற்றுக்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்ததுடன்விவசாயத் திணைக்களத்தினால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# முன்னுதாரணமான நகரமாக வவுனியாவை மாற்றுவேன்
## நகரபிதா உறுதிமொழி

(குருமன்காடு)

வவுனியா நகரத்தை இலங்கையின் முன்னுதாரணமான நகரமாக மாற்றுவதே எனது நோக்கமென வவுனியா நகரபிதா இ. கௌதமன் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

வவுனியா நகரசபையினால் பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன. கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் நகர அபிவிருத்தி என்பன முக்கிய விடயமாகும்.

கடந்த காலங்களில் பௌர்ணமி விழாக்கள் கொண்டாடப்பட்டு பின்னர் அவை கைவிடப்பட்டிருந்தன.

எமது காலத்தில் அதனை மீள் நடத்தி வவுனியா கலைஞர்களுக்கு ஊக்கத்தை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

நகர அபிவிருத்திக்கான முடிவுகள் தவிசாளர் என்ற வகையில் தன்னிச்சையாக என்னால் மட்டும் எடுக்கப்பட முடியாது. அனைத்து உறுப்பினர்களதும் ஒத்துழைப்பு ஆலோசனைகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்படும்.

அதற்கு அனைவரும் கட்சி, மதம், இனம் என்ற வேறுபாடு இன்றி எமது நகரம் என்ற நோக்கோடு கைகோர்க்க வேண்டும். அதனூடாகவே மக்கள் சேவையை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவித்தார். (2-250)

# பாராளுமன்றத்தைப் புனரமைக்க 100 கோடியா?

# வீண்விரயத்தை தவிர்த்து 2000 வீடுகள் அமைக்கலாம்



## அமைச்சர் சஜித் பிரேமதாச வலியுறுத்து

(கொழும்பு)

மக்களின் பிரதிநிதிகள் 225 பேர் கொண்ட பாராளுமன்றத்தை புனரமைப்புச் செய்ய ஒதுக்கப்படவுள்ள 100 கோடி ரூபாவில் வீடில்லாத 2000 குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுக்க முடியும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியை புனரமைப்புச் செய்ய இவ்வளவு அதிகளவு நிதி ஒதுக்கப்படுவது தேவையற்றது எனவும் மக்கள் பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை தெரிவு செய்தது அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே அன்றி சொகுசு கொண்டாடுவதற்கல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு ஒதுக்கப்படவுள்ள 100 கோடி ரூபாவும் தனது அமைச்சுக்கு வழங்கப்பட்டால், 25 வீடுகளைக் கொண்ட 80 கிராமங்களை உருவாக்க முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விகாரைகள் நிர்மாணிப்பதைத் தடுக்க அரசு சட்டம் கொண்டு வரவில்லை

### மகிந்தவின் கருத்தை நிராகரித்த அமைச்சர் காமினி



(கொழும்பு)

விகாரைகள் அல்லது ஏனைய மத வழிபாட்டு தலங்கள் புதிதாக நிர்மாணிக்கப்படுவதை தடுக்க அரசாங்கம் சட்டம் ஒன்றை கொண்டு வர தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதை முற்றாக நிராகரிப்பதாக புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்த சட்டத்தை கொண்டு வருமாயின் புதிதாக விகாரைகள், அறநெறி பாடசாலைகள் உட்பட எந்த மத தலங்களையும் புதிதாக நிர்மாணிக்க முடியாது போகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூறியிருந்தார்.

எனினும் அரசாங்கம் அப்படியான சட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பான எந்தத் தீர்மானங்களையும் எடுக்கவில்லை என காமினி ஜயவிக்ரம பெரேரா கூறியுள்ளார்.

குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகள் மற்றும் ஏனைய மத வழிபாட்டு தலங்களை அடையாளம் கண்டு அவற்றை முன்னேற்றுவதற்கான முக்கியத்துவத்தை வழங்கும் நோக்கிலேயே புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கண்டியில் கலவரம்

### அமித் வீரசிங்க உள்ளிட்ட 18 பேருக்கும் விளக்கமறியல்




(கொழும்பு)

கண்டிக் கலவரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மஹசோன் பலகாய அமைப்பின் அமித் வீரசிங்க உள்ளிட்ட 18 பேரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

## சேலையில் புத்தர் உருவம்; பெண் மீது மக்கள் விசனம்



(கொழும்பு)

தலவாக்கலை - லிந்துலை சமுர்த்தி வலயத்தினால், ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ், சிங்கள புத்தாண்டு வைபவத்திற்கு புத்த பகவானின் உருவப்படம் பொறித்த சேலையை அணிந்து வந்திருந்த பெண்ணை வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

அக்கரபத்தனை பொலிஸ் பிரிவின் ஹோல்புறூக் பொல்மோர் தோட்டத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் இந்த புத்தாண்டு வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

புத்தாண்டு வைபவத்தை ஏற்பாடு செய்திருந்த சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரியின் மருமகள் இந்த சேலையை அணிந்து வந்திருந்ததாக வைபவத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சிவப்பு நிறமான இந்த சேலையில் மஞ்சள் நிறத்தில் புத்த பகவானின் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

புத்தாண்டு வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் பெண் அணிந்திருந்த சேலை குறித்து அங்கு கடமையில் இருந்து பொலிஸ் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து சமயத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையிலான ஆடைகளை அணிய வேண்டாம் என பொலிஸார் பெண்ணுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.

இந்த சேலை தனக்கு இந்தியாவில் இருந்து கொண்டு வந்து கொடுக்கப்பட்டது என பெண் கூறியதாக அக்கரபத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆனந்தசிறி தெரிவித்துள்ளார். (இ-7)

## பேராதனை தாவரவியல் பூங்காவுக்கு பெப்ரவரி மாதம் அதிக வருமானம்



(கண்டி)

இலங்கையின் மத்திய மாகாணம் கண்டியில் அமைந்துள்ள பேராதனை தாவரவியல் பூங்கா மூலம் கடந்த பெப்ரவரி மாதம் அதிக வருமானம் கிடைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

குறித்த பூங்காவைப் பார்வையிடுவதற்காக கடந்த பெப்ரவரி மாதத்தில் உள்ளூர் சுற்றுலா பயணிகள் 98 ஆயிரத்து 411 பேரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 58 ஆயிரத்து 154 பேரும் வருகை தந்துள்ளனர்.

தேசிய சுற்றுலாப் பயணிகள் மூலம் தாவரவியல் பூங்கா மூலம் கிடைத்துள்ள வருமானம் நான்கு கோடி 20 இலட்சம் ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மூலம் 85 இலட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது. (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>தகைமை/தொழில்:O/L/சாரதி<br>தொ.இ: B/7601 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கிபா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.A/அரச தொழில்<br>தொ.இ: G/7661 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/கடை<br>தொ.இ: B/7602 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/7662 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கிபா: செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/7604 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 75 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/7663 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 19சூரி செவ் 12 இல்<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்:QSமாலைதீவு<br>தொ.இ: B/7605 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CIMA/தனியார் தொழில்<br>தொ.இ: G/7665 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வெயில் கொடுமையில் இருந்து எம்மைக் காப்பது எப்படி?

"வெயில் நேரத்துல வெளிய போகாதே, ஒடம்பு கறுத்துப்போயிடும்" , "நிறையத் தண்ணி குடிக்கணும். இல்லைன்னா வயித்துப் பிரச்சினை ஏதாவது வந்திடும்" என்பது போன்ற அறிவுரைகளை கோடை காலத்தில் அதிகம் கேட்டிருக்கலாம். கோடை காலத்தில் சருமம் தடித்துக் காணப்படுதல், முகமும் சருமமும் கருமை நிற மடைதல் போன்ற சருமப் பிரச்சினைகள் அதிகம் ஏற்படும். சிலருக்கு இயற்கையாகவே சரும வரட்சி (Dry Skin) இருக்கும். கோடையில் அவர்களது நிலைமை மிகவும் சிரமம். ஏற்கனவே சருமப் பிரச்சினை உள்ளவர்கள் சருமப் பாதுகாப்புக்கு என்னென்ன செய்யலாம்.

"சருமம் எந்த இடத்தில் கறுத்திருக்கிறதோ, அந்த இடத்தில் எலுமிச்சைச் சாறு - தயிர் - தக்காளி பேஸ்ட் அல்லது எலுமிச்சைச் சாறு - உருளைக்கிழங்கு பேஸ்ட் போன்ற இரண்டில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம். எலுமிச்சையிலுள்ள ஆல்ஃபா-ஹைட்ராக்சில் அமிலம் (Alpha hydroxyi acids), விற்றமின் சி மற்றும் சிட்ரிக் அமிலம் (Citric acid) போன்றவை சரும நிறம் மாற்றமடைவதைச் சரிசெய்யும்.

முகத்தை "பளிச்" சென ஆக்குவதற்கு, பலரும் பிளீச்சிங் செய்வார்கள். அதற்கு தேன் சிறந்த தீர்வு. வெறும் தேனையோ, பப்பாளிச் சாறு கலந்த தேனையோ தினமும் சருமத்தில் தேய்த்துக் கொள்ளலாம். அன்னாசிப் பழத்தை தேனில் கலந்தும் தேய்த்துக் கொள்ளலாம். அன்னாசிப் பழத்திலிருக்கும் புரோமலைன் (Bromelain) என்ற என்சைம், தோலிலிருக்கும் இறந்த செல்களை நீக்கி, முகத்தைப் பளிச்சென மாற்றும். அன்னாசிப் பழம் - தேன் கலவையை இரண்டு மூன்று முறை தேய்த்துக் கொள்வது நல்லது.

சிலருக்கு கண், மூக்கு, உதடு பகுதிகளைச் சுற்றிக் கருவளையம் இருக்கும். புளித்த தோசை மாவுடன் தக்காளி சேர்த்து முகத்தில் தேய்த்தால் கருவளையம் நீங்கி பொலிவான சருமத்தைப் (Event one) பெறலாம். இன்ஸ்டன்ட் பிளீச்சராக (Instant Bleacher) இது இருக்கும். தக்காளி - தயிர் பேஸ்ட், தக்காளி - கடலை மாவு- கற்றாழை பேஸ்ட் போன்றவை மிகவும் நல்லவை.

பெண்கள், மஞ்சளுடன் கடலை மாவு சேர்த்து ஃபேஸ் பேக்



போட்டுக் கொண்டால், வெயிலின் புறஊதாக்கதிர்கள் ஏற்படுத்தும் பாதிப்புகளிலிருந்து விடுபடலாம். தினமும் சோப்புக்குப் பதில் மஞ்சள் தேய்த்துக் குளிப்பது, சருமம் கருமையடைவதிலிருந்து தடுக்கும். சூரிய ஒளியால் சருமத்தில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் தடுக்கும்.

தேங்காய்ப்பாலில் அதிக கொழுப்புச்சத்து இருப்பதால், சருமத்துக்கு நீர்ச்சத்து கிடைக்கவும், நிறம் கருமையாவதையும் தடுக்கும். ஆண்கள், கற்றாழைச் சாற்றுடன் தேங்காய்ப்பால் சேர்த்து முகத்தில் தேய்த்துக்கொள்ளலாம். சந்தனத்துடன் தேங்காய்ப்பால் கலந்து, ஃபேஸ் பேக்காக பயன்படுத்துவது முகப் பொலிவை அதிகரிக்கும். வெயில் காலத்தில் வியர்வை நாற்றத்தால் சிரமப்படுபவர்கள், சந்தனத்தைத் தேய்த்துக் கொண்டாலே அந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு விடலாம்.

"முகத்தில எண்ணெய் வழியுது" என்பவர்கள் கடலை மாவு, ரோஸ் வாட்டர், முல்தானி மெட்டி போன்றவற்றைச் சேர்த்து பேஸ்ட் ஆக்கி, தினமும் முகத்தில் தேய்த்து வந்தால், அதிலுள்ள ஆன்டிஆக்ஸிடன்ட் முகத்தைப் பளிச்சென மாற்றிவிடும்.

தயிர், உடலுக்கு மட்டுமன்றி சருமத்துக்கும் நல்லது. தயிரை அப்படியே பயன்படுத்துவதற்குப் பதிலாக, தக்காளியுடன் இரண்டு டீஸ்பூன் தயிர் சேர்த்து பயன்படுத்தலாம். ஒரேஞ்சுப் பழத்தின் தோலை அரைத்து, அதனுடன் தயிர் சேர்த்தும் பூசலாம்"

உடலின் சருமப் பகுதியைப் பாதுகாக்க "ஃபேஸ் பேக்" யோசனைகள் பயன்பட்டாலும், உடலின் உட்பகுதியை குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமே. அதற்கான சில யோசனைகள்.

"கோடை காலத்தில் சருமத்தைப் பாதுகாக்க இரண்டு வகையான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். சருமத்தின் பராமரிப்புக்காக கொடுக்கப்படவேண்டிய வெளிப்புறப் பாதுகாப்பு (External Care), மற்றொன்று, உடல் குளுமைக்காக கொடுக்கப்பட வேண்டிய உடலின் உள்புற பாதுகாப்பு (Internal Care).

உடை விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். அடர் நிறங்களைத் தவிர்த்துவிட்டு பச்சை, மஞ்சள், நீலம் போன்ற மங்கலான நிறமுள்ள உடைகளை மட்டுமே அணிய வேண்டும். உடைகள் உடலை இறுக்காதபடி இருக்கவேண்டியது அவசியம். கோடையில் பருத்தி உடைகள் தான் பெஸ்ட்.! இவை அனைத்தும் உள்ளாடைகளுக்கும் பொருந்தும்.

குளிர்ந்த நீரில், தினமும் மூன்று முறை முகம் கழுவ வேண்டும். அதேபோல காலை, மாலை என இரண்டு முறை குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.

மதியம் 12 முதல் 4 மணி வரை வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். வெளியே வந்தே ஆக வேண்டும் என்ற சூழலில் இருப்பவர்கள், உடலில் வெயில்படும் இடங்களில் தேங்காய் எண்ணெயை தேய்த்துக் கொள்ளலாம். எண்ணெய்ப் பசை உள்ள சருமம் (Oily Skin) உள்ளவர்கள், குளிர்ந்த நீரால் தோலை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளவும்.

தக்காளி, தயிர், எலுமிச்சை, பப்பாளி, வெள்ளரிக்காய் இவற்றில் ஏதாவது இரண்டை அரைத்து, தினமும் சருமத்தில் தேய்த்து வருவது நல்லது. கண்ணுக்குக் கீழே கருவளையம், தோலின் குறிப்பிட்ட பகுதி நிறம் மாறுதல் போன்ற பிரச்சினை இருப்பவர்கள், உருளைக்கிழங்கை மையாக அரைத்து, அந்த இடத்தில் தேய்த்து வந்தால், பிரச்சினை மெள்ள நீங்கும்.

வெயிலில் நீண்ட நேரம் அலைவது சிலருக்கு அரிப்பை ஏற்படுத்தும். அப்படிப்பட்டவர்கள், தினமும் வேப்பிலையை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரில் குளிக்க வேண்டும். இது அரிப்பு பிரச்சினையையும் சரி செய்யும். சருமப் பிரச்சினைகளையும் தீர்க்கும். செயற்கைப் பவுடருக்குப் பதிலாக, நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் இயற்கைப் பொருள்களால் செய்யப்படும் குளியல் பவுடரை (Natural Bath Powder) பயன்படுத்தலாம். இவை அனைத்தும் செய்து பார்த்த பிறகும், பிரச்சினை தொடரும் பட்சத்தில் மருத்துவரை அணுக வேண்டியது அவசியம்.

கோடையில் உடலிலிருந்து அதிக நீர் வெளியேறும் என்பதால், ஒருநாளைக்கு மூன்று முதல் நான்கு லீற்றர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். அதேபோல, உடலிலிருந்து அதிக நீர் வெளியேறும்போது, உள்ளுறுப்புகளில் நீர் வரட்சி ஏற்படும். குறிப்பாக, பெருங்குடலில் நீர் வரட்சி ஏற்படுவதால் மலச்சிக்கல் உண்டாக வாய்ப்பிருக்கிறது.

நீர்வரட்சியைத் தடுக்க, நீர்ச்சத்து நிறைந்த பழங்கள், காய்கறிகள், பீட்ரூட் ஜூஸ், கற்றாழை ஜூஸ், நீர்மோர், கரட் ஜூஸ் போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். கோடையில் அசைவ உணவுகளைத் தவிர்க்கலாம். தயிருக்குப் பதில் நீர்மோர் குடிப்பது நல்லது.

15 நாட்களுக்கு ஒருமுறை, ஒருநாள் முழுக்க உணவுக்குப் பதில் ஜூஸ் மட்டுமே சாப்பிட வேண்டும். இப்படிச் செய்வது, உடலிலுள்ள கழிவு வெளியேற உதவியாக இருக்கும். உடலில் கழிவுகள் வெளியேறி விட்டாலே, சருமப் பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும்"



தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த திருமுறைக் கலாநிதிகள் திருப்பனந்தாள் சோ. முத்துக்கந்தசாமி தேசிகர், வயலூர் திருஞான. பாலச்சந்தர் ஓதுவார் ஆகியோரின் திருமுறைக் கச்சேரி நேற்று நாயன்மார்கட்டு நாயன்மார் குருபூசை மடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் அணி செய் கலைஞர்களாக அண்ணாமலைப் பல்கலைக்கழக புல்லாங்குழல் விரிவுரையாளர் முனைவர் நா.கிரீஷ்குமார், மிருதங்க விரிவுரையாளர் க.சுப்பிரமணியன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (படங்கள்-ஐ. சிவசாந்தன்)

## நெடுந்தீவு பிரதேச செயலர் உடுவிலுக்கு இடமாற்றம்



நெடுந்தீவு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் உடுவில் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது பிரிவு உபசார நிகழ்வு நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் நெடுந்தீவு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மாதர் அபிவிருத்தி சங்கங்கள், முதியோர் அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாற்று வலுவுள்ளோர் சங்கங்கள், நெடுந்தீவு வாழ். மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிரதேச செயலரின் பிரிவுபசார விழாவை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# பாரதம்

## கல்லூரி மாணவிகளுக்கு பாலியல் வலைவீச்சு

# பேராசிரியர் நிர்மலாதேவியின் வீட்டிற்கு சீல் வைப்பு

### முக்கிய ஆவணங்கள் சிக்கின



(சென்னை)

கல்லூரி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பேராசிரியர் நிர்மலாதேவியின் வீடு, கணனி மற்றும் காரிலிருந்த முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக அவரது காரில் இரகசிய டயரியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு, அதில் பல தகவல்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மூன்றாவது நாளாக அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

அத்தோடு, அவரது வீட்டில் நடத்திய சோதனையிலும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, கணனியில் உள்ள தரவுகளும் பெறப்பட்டுள்ளன. இதனையடுத்து அவரது வீட்டிற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நிர்மலாதேவியுடன் தொடர்பில் இருந்தவர்களின் விபரங்களும் சிக்கியுள்ளதாக குற்றவிசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளதோடு, இவற்றை நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நிர்மலாதேவி பேராசிரியராக பணியாற்றி வந்த கல்லூரி நிர்வாகம் மற்றும் அவர் பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிவிக்கப்படும் மாணவிகளிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. (7)

## உச்சநீதிமன்ற நீதிபதியை பதவிநீக்க கோரிய பிரேரணை துணை ஜனாதிபதியால் நிராகரிப்பு

(டில்லி)

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவை பதவி நீக்கம் செய்ய தீர்மானம் கொண்டு வருவது தொடர்பான பிரேரணையை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு நிராகரித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவை பதவி நீக்கம் செய்ய பாராளுமன்றத்தில்தீர்மானம்கொண்டு வரக்கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் மாநிலங்களவை தலைவரான துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவிடம் பிரேரணையை அளித்திருந்தனர்.

மாநிலங்களவையில் இடம்பெற்றுள்ள ஏழு எதிர்க்கட்சிகளை சேர்ந்த 64 எம்.பிக்கள் அதில் கையெழுத்திட்டிருந்தனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம்வெங்கையா நாயுடு ஆலோசனை நடத்தினார். மக்களவை முன்னாள் செயலாளர் சுபாஷ் காஷ்யப்பையும் தொடர்பு கொண்டு பேசினார்.

அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபாலுடன் ஆலோசித்தார். சட்ட



அமைச்சக முன்னாள் செயலாளர் பி.கே.மல்கோத்ரா, சட்டசபை முன்னாள் செயலாளர் சஞ்சய் சிங் ஆகியோருடனும் விவாதித்தார்.

மாநிலங்களவை செயலக மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைகளுக்குப் பிறகு எதிர்க்கட்சிகளின் பிரேரணையை வெங்கையா நாயுடு நிராகரித்துள்ளார். இது தொடர்பாக மாநிலங்களவை செயலகம் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட உள்ளது.

தலைமை நீதிபதிக்கு எதிரான பதவி நீக்க தீர்மான பிரேரணையை நிராகரித்தால், அதை எதிர்த்து நீதிமன்றில் காங்கிரஸ் வழக்கு தொடரும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்தார். எனவே, இந்த விவகாரம் நீதிமன்றிற்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

## காவிரி நீர் விடயத்தில் சாதகமானதொரு தீர்வு கிடைக்கும்

### பொன். இராதாகிருஷ்ணன் உறுதி

(சென்னை)

காவிரி பிரச்சினையில் தமிழ்நாட்டிற்கு சாதகமான முடிவு கிடைக்குமென மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதிக்குள் மத்திய அரசு சமர்ப்பிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், இவ்விடயம் சாதகமான முடிவை பெற்றுக்கொடுக்குமென எதிர்



கர்நாடக மாநில தேர்தல் செயற்பாடுகளுக்காக அம் மாநிலத்திற்குச் சென்றுள்ள பொன். இராதாகிருஷ்ணன், அதற்கு முன்னர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியத்திற்கான திட்ட வரைபை பார்ப்பதாக இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழகத்திற்கு தண்ணீர் வழங்க மறுக்கும் கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர் சித்தராமையாவின் ஆட்சி தொடரக்கூடாதென்றும் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(7)

## மர்மக்காய்ச்சலினால் அச்சத்தில் மக்கள்

(சென்னை)

இராமநாதபுரம், பறையங்குளம் பகுதியில் திடீரென பரவிய மர்ம காய்ச்சலினால் நூற்றுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மர்மக்காய்ச்சல் அப்பிரதேச மக்களிடத்தில் மிகவும் வேகமாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மர்மக்காய்ச்சலினால் அண்மையில் மூதாட்டி ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இதனால் அப்பிரதேச மக்களிடத்தில் மர்மக்காய்ச்சல் தொடர்பில் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

காய்ச்சல் தீவிரமாக பரவி வரும் நிலையில், சுகாதாரத் துறை அமைச்சு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7)

## வைகோ மீது பா.ஜ




(சென்னை)

ஸ்டர்லைட் ஆலையை மூடுமாறு வலியுறுத்தி பரப்புரை மேற்கொண்டு வரும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மீது, திருச்செந்தூரில் வைத்து பா.ஜ.கவினர் கல் வீசியமையால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடியில் மூன்றாவது நாளாக பரப்புரை செய்துவரும் வைகோ மீது, பா.ஜ.க. மாவட்டச் செயலாளர் சிவ முருகன் ஆதித்தன் தலைமையிலான குழுவினர் கடந்த சனிக்கிழமை இரவு

## ஜப்பான் மூதாட் வயதில் கால




(டோக்கியோ)

உலகின் மிகவும் முதிய ஜப்பான் மூதாட்டி 117 ஆவது வயதில் காலமானார்

உலக சாதனைகளை பதிவு செய்து வரும் கின்னஸ் புத்தகத்தில் உலகின் மிகவும் முதிய மூதாட்டியாக இடம் பிடித்து இருந்தவர் நபி தஜிமா.

ஜப்பான் நாட்டை சேர்ந்த இவர் 4-8-1900 அன்று பிறந்தார். 19 ஆம் நூற்றாண்டில் பிறந்து உயிருடன் இருக்கும் ஒரேநபராக கருதப்பட்ட

## வடகொரியாவில் பேருந்து 30க்கு மேற்பட்ட சீன சுற்று



(பியாங்யாங்)

வடகொரியாவில் நிகழ்ந்த வீதி விபத்தில் சீனாவைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

வடகொரியாவில் ஹுவாங்காய் வீதியில் சுற்றுலா பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து கவிழ்ந்தது. இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 30 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பலியாகி உள்ளனர். அவர்கள் சீனாவை சேர்ந்த சுற்றுலாவாசிகள் எனத் தெரிய வந்துள்ளது.

இதுபற்றி சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில்,

# வெளிநாடு

## பா.ஜ.க கல்வீச்சு

இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, வைகோவுக்கு கறுப்புக்கொடி ஏந்தி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதோடு, மாற்று பாதையில் செல்லுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் வலியுறுத்தப்பட்டது.

எனினும், தான் மாற்றுப்பாதையை உபயோகிக்கப் போவதில்லை எனத் தெரிவித்த வைகோ, கறுப்புக் கொடிக்கு அஞ்சுவதற்கு தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அல்ல என்றும் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதனால், பா.ஜ.க ஆதரவாளர்களுக்கும் ம.தி.மு.கவினருக்குமிடையில் பரபரப்பு ஏற்பட்டதுடன் வைகோ மீது கல்வீச்சுத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸார் நடத்திய தடியடித் தாக்குதலில் பா.ஜ.க ஆதரவாளர்கள் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ...ாட்டி 117ஆவது ...ாலமானார்



இவருக்கு மகன்கள் மற்றும் மகள்கள் மூலம்பிறந்த 160 வாரிசுகள் உள்ளனர்.

ஜப்பான் நாட்டின் தென்பகுதியில் உள்ள கிக்காய் நகரில் வாழ்ந்துவந்த நபி தஜிமா உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று நபி தஜிமா உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் நேற்று அறிவித்துள்ளனர். (7)


## ...ருந்து கவிழ்ந்து விபத்து ...சுற்றுலாப்பயணிகள் பலி




வடகொரியாவில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி சென்ற பேருந்து வீதி விபத்தில் சிக்கியுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. இதில்பலர் பலியாகி இருக்கக்கூடும் என தெரிவித்துள்ளது.

சீனாவில் உள்ள அரசு தொலைக்காட்சியின் ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், சுற்றுலா பேருந்து ஒன்று பாலத்தில் இருந்து கவிழ்ந்ததில் 30 பேர் பலியாகி உள்ளனர் என தெரிவித்திருந்தது.

அதன்பின் அந்த செய்தி நீக்கப்பட்டு விட்டது. ஆனால் ஏராளமானோர் பலியாகியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. (7)




லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நாட்டைவிட்டு வெளியேறக் கோரியும் சர்வதேசத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் புலம் பெயர் தமிழர்கள் லண்டனில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஆப்கான் தற்கொலைத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 57 ஆக உயர்வு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வாக்காளர் பதிவு மையத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய மனித வெடிகுண்டு தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்துள்ளது.

தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்து அமெரிக்க பாதுகாப்புப்படைகள் வாபஸ் பெறப்பட்ட மூன்றாண்டுகளுக்கு பின்னர் கடந்த 2014 ஆம் ஆண்டில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது.



இந்தத் தேர்தலில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்ந்ததாக புகார்கள் எழுந்தன. நடப்பு பாராளுமன்றத்தின் காலம் முடிவடைவதற்குள் நியாயமான வகையில் அடுத்த தேர்தல் நடத்தப்பட வேண்டும் என உள்ளூர் மக்களும் சர்வதேச அரசியல் நோக்கர்களும் வலியுறுத்தி வந்தனர்.

ஆனால், புதிய வாக்காளர்கள் கணக்கெடுப்பு மற்றும் பாதுகாப்பு நிலவரங்களை காரணம் காட்டி அடுத்தடுத்து தேர்தல் திகதி ஒத்தி வைக்கப்பட்டு வந்தது.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டில் நடத்தி முடிக்க வேண்டியுள்ளது.

இதனால், ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமா? என்ற சந்தேகம் அந்நாட்டு மக்களிடையே நிலவி வந்தது.

இந்நிலையில், காபூல் நகரின் தாஷ்-இ பார்சி என்ற பகுதியில் செயற்பட்டு வந்த வாக்காளர் பதிவு மையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நுழைந்த தற்கொலைப் படை பயங்கரவாதி தனது உடலில் கட்டி வைத்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இந்த தாக்குதலில் 31 பேர் உயிரிழந்ததாகவும், 56 பேர் காயமடைந்ததாகவும் முதற்கட்ட தகவல் வெளியானது.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்பதாக ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் இணையத்தளம் குறிப்பிட்டுள்ள நிலையில் நேற்று மாலை நிலவரப்படி பலியானோர் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்தது.

பலியானவர்களில் பெரும்பாலோனோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் என உள்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்துள்ளது. இதில் 22 பெண்களும், 8 குழந்தைகளும் அடங்குவர்.

மேலும் இந்த தாக்குதலில் 119 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை மோசமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இதேபோல, பக்லான் என்ற பகுதியில் உள்ள வாக்காளர் பதிவு மையத்தில் நேற்று முன்தினம் குண்டு வெடித்ததில் 6 பேர் பலியாகியுள்ளனர். (7)

# சிரியா மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து சிக்காக்கோவில் ஆர்ப்பாட்டம்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, சிக்காக்கோவில் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிக்காக்கோ நகரில் கடந்த சனிக்கிழமை ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், சிரியாவில் அமெரிக்காவின தலைமையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் சிரியாவில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவித்துள்ளனர்

அத்துடன், சர்வதேச சட்ட விதிமுறைகளை மீறும் வகையில், சிரியாவில் அமெரிக்காவின் தலைமையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரியாவின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் மேலும் கருத்து வெளியிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், 'சிரியாவில் அமெரிக்காவின் தலைமையில் நடத்தப்பட்ட தாக்குதல் சட்டவிரோதமானதென்பதுடன், இது போர்க்குற்றமாகும். ஒரு நாட்டின் மீது சுதந்திரமாக விமானத் தாக்குதல்களை நடத்தும் செயற்பாடு, சர்வதேச சட்டத்தில் இல்லை.



அமெரிக்காவின் தாக்குதல் தொடர்பாக ஐ.நா. சபையில் கவனத்திற்கொள்ளப்பட்டு விவாதம் நடத்தப்பட வேண்டும்' என்றனர்.

சிரியாவின் கிழக்குக் கௌட்டாவிலுள்ள போராளிக் குழுவினரை ஒழிக்கும் நடவடிக்கையை சிரிய அரசாங்கப் படையினர் முன்னெடுத்தபோது, டவுமா நகரில் சிரியப் படையினர் இரசாயனத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனைக் கண்டித்த அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகள், சிரிய அரசாங்கத்துக்கு எதிராக தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. சிரியாவில் அமெரிக்கா தலைமையிலான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, சிக்காக்கோ மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (7)

# ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படாது

(கொழும்பு)

எதிர்வரும் மே 8ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு ஆரம்பிக்கப்படும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொள்கை விளக்க உரையை நிகழ்த்துவார் என்றும் எனினும் அந்த உரை மீது விவாதமோ, வாக்கெடுப்போ நடத்தப்படாது என்றும் கூறப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி நள்ளிரவில் இருந்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தை முடக்கியுள்ளார். மே 8 ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் போது, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கொள்கை விளக்க உரையை தோற்கடிப்பதன் மூலம், நாடாளுமன்றத்தை கலைக்கச் செய்யும் திட்டம் ஒன்றை கூட்டு எதிரணியினர் முன்னெடுத்து வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், ஜனாதிபதி உரை சிம்மாசன உரை அல்ல என்றும் அது கொள்கை விளக்க உரை மாத்திரமே என்றும் கூறப்படுகிறது.

இதனால், இந்த உரையின் மீது விவாதம் நடத்தப்படவோ, வாக்கெடுப்பு நடத்தப்படவோ சாத்தியமில்லை என்றும் அரசியல் பிரமுகர்கள், சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் நாடாளுமன்றம் ஜனாதிபதியால் முடக்கப்பட்டு மீண்டும் கூட்டப்படும் போது, அரசாங்கத்தின் கொள்கையை விளக்கி உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த உரை மீது விவாதம் நடத்தவோ, வாக்கெடுப்பு நடத்தவோ, அரசியலமைப்பில் இடமளிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஜனாதிபதி சிம்மாசன உரை நிகழ்த்தும் திட்டம் இல்லை என்றும், அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய கொள்கைப் பிரகடனத்தையே அவர் வெளியிடுவார் என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எத்தகைய விவாதம் அல்லது வாக்கெடுப்புக்கும் அரசாங்கம் தயாராகவே இருக்கிறது. அச்சம் கொள்ளவில்லை என்று ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமைச்சரவை மாற்றம் அவசியமற்றது அமைச்சர் மத்தும பண்டார கருத்து

(கொழும்பு)



அமைச்சரவை மறுசீரமைப்பொன்று தற்போதைய சூழ்நிலையில் அவசிய மற்றது எனவும் எஞ்சியுள்ள 2 வருடகாலத்தை உள்ள அமைச்சைக் கொண்டு சேவையாற்ற வழிவிடுமாறும் அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மொனராகல கும்புக்கன பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் பிரதமருடன் கலந்தாலோசித்து அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சி சில விடயங்கள் தொடர்பில் அலட்டிக் கொள்வதில்லை

## மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் தனிப்பட்ட உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கும் சட்ட மூலங்கள் குறித்து கூட்டு எதிர்க்கட்சி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்கவின் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியினால் பாராளுமன்ற ஆரம்ப அமர்வின் போது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்யும் திருத்தச் சட்ட மூலம் முன்வைக்கப்படவுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மகிந்த ராஜபக்ஷ எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியுடன் லண்டன் சென்ற தூதுக்குழுத் தகவல்கள் பொய்!

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக விஜயம் செய்துள்ள ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டுள்ள உத்தியோகபூர்வ தூதுக்குழுவினர் தொடர்பாக பல்வேறு பொய்யான தகவல்கள் வெளியாகிய வண்ணம் காணப்படுகின்றன.

மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதியுடன் பயணித்த உத்தியோகபூர்வ தூதுக்குழுவில் ஜனாதிபதியின் பாரியார், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வைத்தியர், அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அவரது பாரியார், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, உரை பெயர்ப்பாளர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் இருவர் ஆகியோரே உள்ளடக்கப்பட்டனர்.

மேலும் உத்தியோகபூர்வ தூதுக்குழுவில் உள்ளடக்கப்படாத ஜனாதிபதி ஊடகப் பிரிவின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக செய்தியாளர்களும் அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஊடகவியலாளர்களும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் சிலரும் மாத்திரமே இவ் விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

இதற்கு மேலதிகமாக பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்கோ அல்லது அதனுடன் இணைந்ததாக இடம்பெற்ற ஏனைய கலந்துரையாடல்களுக்கோ ஜனாதிபதி செயலகத்தின் செலவில் எந்தவொரு நபரும் பயணிக்கவில்லை.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர, கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டதுடன் குறித்த பொருளாதார மாநாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்திய எந்தவொரு தரப்பினருக்கும் ஜனாதிபதி செயலகத்தினால் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே நூற்றுக்கும் அதிகமான தூதுக்குழுவினர் ஜனாதிபதியின் தூதுக்குழுவில் இணைந்து கொண்டுள்ளனர் என ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்பதுடன் அவற்றை முற்றாக நிராகரிக்கின்றோம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எதிர்த்துப் பேசுவது உண்டா?

நாம் ஒன்றை நன்றாக நினைவில் வைத்துக் கொள்வது அவசியம்.. மற்றவர்களை எதிர்த்துப் பேசுவது என்பது அவர்களது ஆழ்மனத்தைக் கீறிப் பார்ப்பதைப் போன்றது. இது மனிதர்களுக்குக் கட்டோடு பிடிக்காத விடயம்.

அதுவும் நான்கு பேர் மத்தியில் இந்தத் தவறைச் செய்தால் அத்தவறு நம்மைச் சும்மா விடுவதில்லை. ஏதாவது ஒரு வழியில் வேறு ஒரு வடிவில் நம்மைத் துரத்தித் துரத்தி அலைக்கழிக்கிறது.

எதிர்த்துப் பேசுவது என்பது மற்றவர்களைக் கடுமையாகக் காயப்படுத்துவது. இதன்மூலம் நம்முடைய காயங்கள் (மனக்குறைகள்) ஆறுவதில்லை. மாறாக அவை அதிகரிக்கின்றன.

கருத்து வேறுபாடுகள் இந்த உலகில் சகஜம். அதுவும் அதிகமாகப் பத்திரிகைகளைப் படித்து ஏகப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து கல்வியும் கற்று உலக ஞானமும் பெற்றுவிட்டதில் அனைவருக்குமே கருத்துவளர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

எவரும் எதுவும் சொன்னால் அதை நம்முடைய வலிமையான அறிவு அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. எடைபோட்டுப் பார்க்கிறது. ஊஹும்! இவர் சொல்வது சரியில்லை என்றே தோன்றுகின்றது.

இது போதாதென்று நான் என்கிற நினைப்பு வேறு நம்மைச் சும்மா இருக்க விடுவது இல்லை. நாம் அன்புக்குக் கட்டுப்பட வேண்டும். அதிகாரம் உள்ளவர்களை எதிர்த்துப் பேசினால் அது நம் வளர்ச்சியைப் பாதிக்கும் என்கிற எதிர்கால நினைப்பும் சேர்ந்தே வரவேண்டும். அதற்காக நாம் மற்றவர்கள் இழுத்த இழுவைக்கெல்லாம் நாய்க்குட்டிமாதிரிப் பின்னால் ஓட வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

நம்முடைய மாற்றுக் கருத்துக்களை நாம் தாராளமாக மற்றவர் முன் வைக்கலாம். ஆனால் இதற்கு இரண்டு நிபந்தனைகள் முக்கியம்.

முதலாவது, எதிராளிக்குக் கேட்டுக் கொள்ளும் மனநிலை இருக்க வேண்டும். இதற்கு அவரது அப்போதைய மனநிலை எப்படி என்று நாம் அறிந்து கொள்வது அவசியம். இரண்டாவது வேறு எவரும் அந்த இடத்தில் இருக்கக் கூடாது.

இத்தகைய இரு சந்தர்ப்பங்களில் தான் மனிதர்கள் இறங்கி வருகிறார்கள்.

இதையும் மீறி எதிராளி சொல்லு! இப்பவே சொல்லு. எனக்கு அது தெரிஞ்சாகணும் என்றும் காச்மூச் என்றும் கத்தினால் இல்லை! நீங்க இப்ப கோபமா இருக்கீங்க. நாம அப்புறமா அதைப் பத்திப் பேசுவோம் என்று ஆரம்பிக்க வேண்டும். சிலபேர் அதிசயமாக பரவாயில்லை. எனக்குக் கோபம் இல்லை. இப்பவே சொல்லு நான் பொறுமையாகக் கேட்கிறேன் என்று 100 டிகிரி சூடு குறைந்து கேட்க முன் வருவார்கள்.

இத்தகைய சூழ்நிலைகளில் நாம் என்ன பேசினாலும் நாம் பேசுவது, அவர்களுக்கு எதிர்த்துப் பேசுவதாகவே தோன்றாது!

**லேனா தமிழ்வாணன்**

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு நிச்சயம் தோல்வி

## முன்னாள் அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டால் அவர் நிச்சயம் தோல்வியடைவார் என முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்-முஸ்லிம் மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளித்தாலும், சிங்களப்பெரும்பான்மை மக்களின் ஆதரவை அவர் இழந்துவிட்டார் எனவும் தயாசிறி தெரிவித்தார்.

கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நாங்கள் யாரையும் முடிவு செய்யவில்லை. பல பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. யாராக இருந்தாலும் தமிழ்- முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறுபவராக அவர் இருக்கவேண்டும்.

சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதைப்போன்று தமிழ்- முஸ்லிம் மக்களின் ஆதரவையும் பெறக்கூடிய ஒருதலைவரே எமக்கு தேவைப்படுகிறார். அவரை தெரிவுசெய்யவே நாங்கள் இப்போது முயற்சி செய்கிறோம்.

தற்போதைய நிலைமையில் ஜனாதிபதி மைத்திரியை அடுத்த வேட்பாளராக நிறுத்துவது சாத்தியமற்றதாகவே உள்ளது. கூட்டு எதிரணியும் நாங்களும்இணைந்தே இந்த முடிவு எடுக்க வேண்டும்.

அவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்துஅவரைஅழைத்தால் ஓரளவு சாத்தியமாகலாம். ஆனால் பொதுவாக தற்போது பெரும்பான்மை மக்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நிராகரிக்க ஆரம்பித்துவிட்டனர்.

எனது கட்சித் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியுடன் இணைந்து பயணிக்கலாம். அதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

ஜனாதிபதி வேட்பாளராக யாரை களமிறக்குவது என்பதை பேசியே தீர்மானிக்க வேண்டும். பசில் ராஜபக்ஷ வின் பெயரும் வேட்பாளராக கூறப்படுகிறது. இன்னும் ஒரு சிலரின் பெயர்களும் உள்ளன.

ஆனால் இங்கு மூன்று விடயங்களைப் பார்க்க வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறக்கூடியவராக ஜனாதிபதி வேட்பாளர் இருக்கவேண்டும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விரும்புகின்றனர். சிங்கள மக்களின் பாரிய எதிர்ப்பு அவருக்கு இருக்கின்றது.

இந்நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டால் தோல்வியடைவார்" என முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

## விகாரைகளை தரப்படுத்துவது நகைப்பிற்குரியது

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த விகாரைகளை தரப்படுத்துவது நகைப்பிற்குரியது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் ஊடாக பௌத்த விகாரைகள் தரப்படுத்தல் பட்டியலுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் நகைப்பிற்குரியதாகும். மத வழிபாட்டுத் தலங்களுக்கு உதவ வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். மாறாக மத வழிபாட்டுத்தலங்கள்விடயத்தில் அரசாங்கம் தலையீடு செய்யக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 500ஹெக்டேயரில் இறப்பர் செய்கை



(கொழும்பு)

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் இந்த வருடத்தில் நான்கு மாவட்டத்தில் 500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் புதிதாக இறப்பர் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

கேகாலை, கண்டி, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்கள் இதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் கேகாலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ். சீ.சுசந்த பெரேரா தெரிவித்துள்ளார். (இ-7)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1946 - 01 - 19

உதிர்வு 2017 - 05 - 04

அமரர்.

பொன்னையா வத்துமலை

(திதி-சித்திரை பூர்வபக்க நவமி - 24.04.2018)

ஆண்டொன்று கழிந்தாலும்
அழியாதப்பா உங்கள் நினைவு
மாண்டு மறைந்திடுமோ மகிமை
தாங்கும் நின் பாச ஒளி
நீண்ட தூரம் சென்றாலும் எம்
நெஞ்சத்தில் நீங்கள் தான் அப்பா
மீண்டும் எம்மைக் காண
வருவதெப்போ எம் தந்தையே!



[3710]

எம் தந்தையின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் 24.04.2018 இன்று செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்றைய தினம் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"அன்னை இல்லம்",
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.



விற்பனையாகிறது

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

முதன்மை நிலை - ஒன்று
(தரம் ஒன்று, இரண்டு வகுப்புக்களுக்கானது
புதியபாடத்திட்டத்திற்கு அமைவாக)

மாணவர்களுக்கான
தேர்ச்சிக் கணிப்பீட்டுச் செயற்பாடுகள்

தேவையான பாடசாலைகள் விசேட கழிவுடன்
பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்
0776258778




யாழ்ப்பாணத்தில்-அன்னை புத்தகசாலை,
நவீனசந்தை, யாழ்ப்பாணம். 021 222 9881

விலை: 150/-

# மே முதலாம் திகதி சமையல் எரிவாயு விலை உயரும்

## பந்துல எம்.பி. உறுதி



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் மே மாதம் முதலாம் திகதி எரிபொருள் விலை அதிகரிப்புக்கான சூத்திரமொன்றை அரசாங்கம் அறிமுகம் செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சூத்திரத்தின்படி பெற்றோல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலை உயர முடியும் எனவும் கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள 3 வருட உடன்படிக்கையின்படி இலங்கைக்கு மூன்றாவது கட்ட உதவி எதிர்வரும் ஜூன் மாதம் கிடைக்கப் பெறவுள்ளது. இந்தக் கடன் தொகை கிடைக்கப் பெறுவதற்கு முன்னர் உடன்படிக்கையில் செய்து கொள்ளப்பட்ட அம்சங்களை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே, எரிபொருளுக்கான சூத்திரம் அறிமுகம் செய்யப்படுகின்றது. புதிதாக வரிகள் அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக தொழிலாளர் தினத்தில் மக்களை அறிவுறுத்தவுள்ளோம் எனவும் பந்துல எம்.பி. மேலும் அறிவித்துள்ளார். (இ-7)

## மீன்பிடிக்கச் சென்ற இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் பலி

(ஏறாவூர்)

இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் களப்பில் மீன்பிடிக்கச் சென்ற போது சேற்றில் புதைந்து உயிரிழந்துள்ளாரென காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் மட்டக்களப்பு தாளங்குடா பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி 6 ஆம் பிரிவு விடுதி வீதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஏ.சி.முகமட் றியாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தாளங்குடா இராணுவ முகாமின் பின்பகுதியில் அமைந்துள்ள களப்பு பகுதியில் சம்பவதினம் மாலை 5 மணிக்கு சென்று மீன்பிடியில் ஈடுபட்டபோதே களப்பின் சேற்றில் புதைந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பொதுநலவாய வர்த்தக மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் பங்கேற்பு

(லண்டன்)

லண்டனில் இடம்பெற்ற பொதுநலவாய வர்த்தக மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பெருமளவான சிறிய மற்றும் மத்தியதர வர்த்தகர்கள் பங்கேற்றுள்ளனர்.பொதுநலவாய மாநாட்டுக்கு இணையாக கடந்த 16 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை வர்த்தக மாநாடு நடைபெற்றது.




மாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு வட்டமேசை கலந்துரையாடலில், இலங்கையின் வர்த்தக தூதுக்குழுவினர் பங்கேற்றுள்ளனர்.

வர்த்தகத்துறையில் நிலவும் பல்வேறு சவால்களுக்கு தீர்வு காண இந்தக் கலந்துரையாடல்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பல உயிர்களைக் காவுகொண்ட காபூல் தற்கொலைத் தாக்குதல்

## இலங்கை கண்டனம்

(கொழும்பு)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 63 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தாக்குதல் சம்பவம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு, கண்டனத்தை வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

"காபூலில் உள்ள வாக்காளர் பதிவு மையத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலை இலங்கை கடுமையாகக் கண்டிக்கிறது. இது ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் ஆகும்" என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 29

### பரமசாமி பஞ்சாட்சரம்

நான் அபூர்வ நிகழ்ச்சிகள் ஒன்றையும் காணாதபடியால் சுவாமி பிரணவானந்தா கூறியதுபோன்று எனது தியானம் (Meditation) போதாது என்று நினைத்துக் கொண்டு எனது அறைக்கு வந்தேன். அப்போது வெளியே செல்ல முடியாத சிலர் ஜன்னல் வழியாக மானசரோவர் ஏரியையும் ஆகாயத்தையும் பார்த்துக் கொண்டு நின்றதைக் கண்டேன்.

**மானசரோவர் ஏரிக்கரையில் கோமங்கள்**

அன்று காலை 5.00 மணியிலிருந்து எங்களுடன் வந்திருந்த குழுவினரும் மலேசியாவைச் சேர்ந்த குழுவினரும் அவர்களோடு வந்த சுவாமிகள் மூவரும் ஏரிக்கரையில் கோமங்கள் செய்தார்கள். நாங்களும் சென்று கோமத்திலே கலந்து கொள்ளத் திருவருள்துணை செய்தது.

எக்கோரெக் உதவியாளர்கள் எந்த வசதியுமற்ற அந்த இடத்தில் பிரசாதங்கள் தயார் செய்து எங்களுக்குத் தந்தார்கள். மலேசியாவைச் சேர்ந்த தமிழர் குழுவும் எங்களுக்குப் பின் இரு பேருந்தில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் "எக்கோரெக்" தான் நேபாள ஏஜெண்டாகப் பணியாற்றினார்கள்.

மானசரோவர் ஏரி சமுத்திரம் போல் அலைகளுடன் காணப்படும். சிலர் ஒரு கிழமை மானசரோவரில் தங்கியிருந்து செபம், பூசை, கோமம் முதலியவற்றை அற்புதமாகச் செய்து கிரிவலம் வந்து யாத்திரையை மேற்கொள்வார்களாம்.

மானசரோவர் ஏரி குளிர் காலத்தில் முழுமையாக உறைந்து காணப்படும். ஏரி நீர் உறையத் தொடங்கும் போதும் முழுமையாக உறைந்திருக்கும் போதும் விசித்திரமான தெய்வீக ஓசைகள் கேட்கின்றன எனக் கூறுகின்றார்கள்.

மானசரோவர் ஏரியிலுள்ள பனி, கோடை காலத்தில் உருக ஆரம்பிக்கும் போது வண்ணமயமான காட்சிகளையும் பல புரிந்து கொள்ள முடியாத தெய்வீக் ஓசைகளையும் கேட்க முடிகின்றது என ஆராய்ச்சி செய்த கலாநிதி வூல்வ்கங் வொல்மர் என்பவர் (Dr.Wolfgang Wollmer) தனது புத்தகத்தில் எழுதியுள்ளார்.



மானசரோவரின் தெற்குக் கரையில்நின்று காலையில் பார்க்கும் போது மிக அழகான மோனத்துவம் செய்யும் முக்திநாதனாகக் கயிலைநாதன் காட்சி தருகின்றார் என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது.

பார்வதி ஏரி என்று கூறப்படும் மானசரோவர் ஏரி எல்லா மதத்தவர்களும் வந்து பூசை செய்து வணங்கும் ஏரியாக விளங்குகின்றது.

**மானசரோவரில் சுகாதாரப் பரிசோதனை**

ஒன்பதாம் திகதி மதியபோசனத்தின் பின்னர் பிற்பகல் 1 மணி அளவில் மானசரோவரின் விடுதி வாசலில் வைத்து ஒவ்வொருவருக்கும் உடல்நலப் பரிசோதனை செய்தார்கள். ஒவ்வொருவருக்கும் உடல் வெப்பம், இரத்த அழுத்தம், பிராணவாயு விகிதாசாரம் ஆகியவற்றைப் பரீட்சித்துப் பார்த்தார்கள்.

பிராணவாயு குறைந்தவர்களை ஒரு இடத்தில் இருத்தி அவர்களை நல்லாக மூச்சை உள்ளே இழுத்துப் பின் அதை முழுக்க வெளியே விடும்படி சொன்னார்கள். இப்படிச் சில நிமிடங்கள் மூச்சுப் பயிற்சியின் பின்னர் இவர்களை மறுபடியும் பரீட்சிக்க வரும்படி அழைத்து உடல்நிலையை மதிப்பீடு செய்தார்கள்.

சுகாதாரப்பரிசோதனை முடிந்ததும் தொடர்ந்து யாத்திரை செய்ய முடியும் என்று தீர்மானித்தவர்களை மட்டும் "தார்ச்சன்" என்னும் கிராமத்திற்குச் செல்வதற்கு அனுமதித்தார்கள்.

இந்தச் சோதனையை எங்களுக்கு நடத்திய பின் மலேசியாவில் இருந்து வந்தவர்களுக்கும் பரிசோதனை நடத்திக் கொண்டு இருந்தார்கள். எங்கள் சுகாதாரப் பரிசோதனை முடிந்ததும் நாங்கள் தார்ச்சன் செல்லும் பேருந்திற்கு வந்து விட்டோம்.

நாங்கள் "தார்ச்சன்" பயணத்தை ஆரம்பித்து சிறிது தூரம் சென்றவுடன் சீன இராணுவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோம். அதையும் முடித்துக் கொண்டு "தார்ச்சனை" நோக்கி விரைந்தோம். இந்த வழியெங்கும் வலதுபக்கமாக கயிலைமலையின் கண் கொள்ளாக் காட்சிதனைப் பார்த்துக்கொண்டே வந்தோம்.

(தொடரும்)

# சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

**கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப்பொருட்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருட்கள் விநியோகம்-2018/19**

1.வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப் பொருட்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்றுநீக்கி பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2.விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3.யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.பொருத்தமான கேள்வி வைப்புப்பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக **ரூபா. 3,000** காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **24.04.2018 தொடக்கம் 15.05.2018** வரையான காலப்பகுதியில் **09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை** பெற்றுக் கொள்ளலாம். மேலும் **11.05.2018 காலை 10.00 மணிக்கு** திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

7.**"Diet Supply -2018/19, Elders Home Kaithady, Reference No NP/24/2/5/Food/2018-19"** என்ற விபரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

8.விலைக்கேள்விகள் **17.05.2018ந் திகதி 14.00 மணிக்கு** முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக இத் திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் **17.05.2018 ஆந் திகதி 14.00 மணிக்கு** திறக்கப்படும். (சி-2376)

திணைக்கள பெறுகைகள் குழு,
சமூகசேவைகள் திணைக்களம் வ.மா,
கண்டிவீதி, கைதடி.
தொ.இல: 021 320 2464, தொலைநகல்: 021 2231725, மின்னஞ்சல்: ssdeptnp@gmail.com

வனஜா செல்வரட்ணம்
தலைவர்.


# மேதினக் கலந்துரையாடலுக்காக ஒன்றுதிரளும் மகிந்த அணியினர்

(கொழும்பு)

எதிர்வரும் மே தினம் தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு ஒன்றிணைந்த எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடவுள்ளனர்.

கட்சி தலைவர்களுக்கான குறித்த 'ஒன்றுகூடல், கொழும்பு - விஜயராம பகுதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெறவுள்ளது.

குறித்த ஒன்றுகூடலின் போது, நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. (இ-7)


# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்.திருமதி

## அழகம்மா இராமசாமி



கடந்த 26.03.2018 ஆம் திகதி திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர்.அழகம்மா இராமசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.04.2018 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை 25.04.2018ம் திகதி முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் தாங்களும் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் எமது தாயாரின் இறுதி நிகழ்வுகளில் நேரடியாகக் கலந்து கொண்டும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் தெரிவித்தவர்கள் மற்றும் மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் ஊடாக துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தாங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(3731)

மாலியவத்தை, சங்கானை.


குடும்பத்தினர்
மகன் இ.சிறீதரன்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1393

Search for people, places and things
Nagendram Home

### தேனுபவன்

வேலைவெட்டி இல்லாதவன்தான் எந்த நேரமும் Whatasappல Facebookல இருப்பானாம்



அப்போ Whatsapp, Fb பக்கமே வராதவன் எல்லாம் ஜனாதிபதியாவா இருக்கானுங்க

### அபிராமி

ஏதாவது தப்பு பண்ணிட்டு ஆங்கிலத்தில Sorry கேட்க மனது தயங்குவதில்லை. அதேவேளையில் தமிழில் மன்னிப்புக் கேட்க சற்றே தயங்குகிறது!



காரணம் ஆங்கிலம் மேலோட்டமானது, தமிழ் உயிரோட்டமானது

### அஜந்தா

எனக்கு ஒரு டவுட்டு... வருமானத்திற்கு அதிகமா சொத்து இருந்தா வழக்குப் போடுவாங்களாம்



அப்போ வருமானத்திற்கு அதிகமா கடன் இருந்தா அடைச்சிடுவாங்களா???

### வினோதா

கல்யாண வீட்டுல என் கண் எதிரிலேயே செருப்பு திருட்டுப் போயிடுச்சு.
ஐயோ செருப்பு உன்னுடையதா?



இல்லை, நான் எடுத்துட்டுப் போலாம்னு பார்த்து வைச்சிருந்த செருப்பு...

### மதிவதனி

தினமும் ஓய்வில்லாமல் உழைப்பதால்தான் எல்லா இடத்திலும் உயரத்தில் உள்ளது



கடிகாரம்...!

### ரஜிதா

அம்புலன்ஸ்"க்கு வழி விடாதவங்கட இப்ப



கவர்மெண்ட் பஸ்ஸ பார்த்தா வழி விடுறாங்க...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.04.2018-14.05.2018

## வாட்டங்களைப் போக்கும் வழிபாடு!



விளம்பி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் செவ்வாயும் சனியும் இணைந்துள்ளனர். இராசிநாதன் குரு வக்ரம்பெற்று பகை வீட்டில் சஞ்சரிக்கின்றார். புத்திர ஸ்தானாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் பிள்ளைகளால் மனக் கலக்கமும் விரயங்களும் உருவாகலாம். வழக்குகள் தொடர்கதையாகும். வளர்ச்சியில் எதிர்பாராத தளர்ச்சியும், வாழ்க்கையில் இதுவரை சந்திக்காத பிரச்சினைகளும் கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம்.

வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் இனம் புரியாத கவலையும் தன்னம்பிக்கை குறைவும் ஏற்படும். இதுபோன்ற காலங்களில் இதயம் மகிழும் வாழ்வமையவும் எடுத்த காரியங்களில் தடை ஏற்படாதிருக்கவும் முறையாக சுயஜாதகப்படி நடைபெறும் தசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். இராசிநாதன் குரு வக்ரம்பெற்றிருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அதிகப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் அகால நேரத்தில் உணவுகளை உட்கொள்வதன் மூலமும் நூதன வியாதிகள் உடலில் குடிகொள்ளும்.

2இல் கேது 8இல் ராகு இருப்பது அவ்வளவு நல்லதல்ல. சர்ப்ப தோஷம் அதிகமாக உள்ளது. எனவே நாகசாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்ய வேண்டும். எப்படிச் செய்தாலும் பாம்புக் கிரகங்கள் உங்களுக்குப் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். குறிப்பாக பகை உணர்வு அதிகரிக்கும். வழக்குகள் அடுக்கடுக்காக வந்து கொண்டே இருக்கும். தொழில் பங்குதாரர்கள் தோள்கொடுத்து உதவ மறுப்பர். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம், வாகன மாற்றம், உத்தியோக மாற்றம் என்று மாற்றங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

புதன் சந்திரனோடு 4ஆம் இடத்தில் சேர்க்கை பெற்றிருப்பதால் எண்ணங்களை எளிதில் செயலாக்க இயலாது. சூரிய சுக்ர சேர்க்கை 5ஆம் இடத்தில் இருப்பது ஓரளவு நன்மை தரும். மலை போல் வந்த துயர் பனிபோல் விலகும். மக்கள் செல்வாக்கு பெற்றவர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிகாட்டுவர். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வது நல்லது. ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் திடீர் பாதிப்புகளை சந்திக்க நேரிடும். எனவே எதிலும் விழிப்புணர்ச்சி தேவை. சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும், செவ்வாய்க்கிழமை தோறும் வராஹி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். மேலும் முருகனுக்குரிய ஆலயங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் போராட்டமான நிலை மாறி புதிய திருப்பம் ஏற்படும்.

### ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 21 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்ரன் செல்கின்றார். அது சுக்ரனுக்குச் சொந்த வீடாகும். 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் 6இல் சஞ்சரிக்கும் பொழுது ஜீவன ஸ்தானம் பலமடைகின்றது. எனவே உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு நல்ல உத்தியோகம் அமையும். வீண் விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். நீண்டதூரப்பயணங்கள் செல்வதில் இருந்த தாமதங்கள் அகலும். ஆரோக்கியம் சீராகும்.

### சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25 ஆம் திகதி சனி பகவான் தனுசு இராசியில் வக்ரம் பெறுகின்றார். தன ஸ்தானம் மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. விரயங்கள் கூடும். பண நெருக்கடி அதிகரிக்கும். ஒருசிலருக்கு கைமாற்று வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். ஒரு கடனை




அடைக்க மற்றொரு கடனை வாங்கிச் சங்கிலித் தொடர்போல கடன் சுமை கூடிக்கொண்டே செல்லும். உடன்பிறப்புகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள். குடும்ப உறுப்பினர்களிடம் கோபத்தைக் குறைத்துக் கொண்டு பேசுவது நல்லது.

### மகர செவ்வாயின் சஞ்சாரம்!

ஏப்ரல் 30ஆம் திகதி உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் மகர இராசியில் உச்சம் பெறுகின்றார். விரயாதிபதி உச்சம் பெறும் இந்த நேரத்தில் எதிர்பாராத விரயங்களும் ஏற்படும். அது பிள்ளைகளாலும் ஏற்படலாம் அல்லது பிரச்சினைகளாலும் ஏற்படலாம். வாங்கிய இடத்தை விற்கிறோமே என்று கவலைப்படுவீர்கள். பத்திரப்பதிவில் தாமதங்களும் தடைகளும் ஏற்படும். குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவது நல்லது.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மே 3ஆம் திகதி புஞ்சம ஸ்தானத்திற்கு வருகின்றார். எனவே வரன்கள் வாசல் தேடிவரும். திருமணத்தடை அகலும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்களை இனம்கண்டுகொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மனக்கலக்கம் ஏற்பட்டு அகலும். புதிய வாகனம் வாங்கி பயணிக்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உண்டு. இம்மாதம் வியாழக்கிழமைதோறும் குருதட்சிணா மூர்த்தியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் இராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இராசியில் செவ்வாய், சனி சேர்க்கை பெற்றிருப்பதால் இனம்புரியாத கவலை மேலோங்கும். எதைச் செய்தாலும் மனதிற்கு திருப்தி என்பது மட்டும் ஏற்படாது. 2இல் கேது இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. நாணயப் பாதிப்புகள் உருவாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமைக் குறைவும், சச்சரவுகளும் அடிக்கடி நிகழும். தாய் மற்றும் உறவினர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். திசை மாறிய தெய்வ வழிபாடு திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகரிகளால் வேலைப்பளு கூடும். சக பணியாளர்களால் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். புதிய வேலைக்கு விண்ணப்பிக்கும் சூழ்நிலை கூட ஒருசிலருக்கு ஏற்படும். பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படாதிருக்க உங்கள் மேற்பார்வையில் அவர்களை வைத்துக்கொள்வது நல்லது. வரவைவிடச் செலவு அதிகரிக்கும். வீடுமாற்றம் கூட ஒருசிலருக்கு ஏற்படும். சனி வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## உழைப்பிற்கேற்ற பலன் ஓரளவே கிடைக்கும்!



விளம்பி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சனி பகவான் 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயும் இணைந்து சஞ்சரிக்கின்றார். விரயச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் விரயங்கள் கூடுதலாக இருக்கும். எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். ஏழரைச் சனியின் ஆதிக்க காலத்தில் அதிலும் விரயச் சனி நடைபெறும் நேரத்தில் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் தான் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும்.

ஜென்மத்தில் கேதுவும் 7 இல் ராகுவும் அமர்ந்து சர்ப்பதோசத்தை உருவாக்கினார்கள். இங்ஙனம் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கும் இந்த நேரத்தில் நாக தோஷ நிவர்த்திப் பரிகாரங்களை உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலங்களில் செய்து கொள்வது நல்லது. பல பணிகள் அரைகுறையாகவே நிற்கும். பக்கத்தில் இருப்பவர்களை நம்பிச் செயல்பட இயலாது.

10 இல் குரு இருப்பதால் பதவி மாற்றங்கள் வந்து சேரும். விரும்பிய இடத்திற்கு மாற்றங்கள் கிடைப்பது அரிது. நீண்ட தூரத்தில் பணிபுரியும் வாய்ப்பால் நிம்மதி குறையலாம். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்படும். மேலிடத்து ஆதரவு குறையலாம். மக்கள் செல்வாக்கை தக்கவைத்துக் கொள்வது நல்லது.

3ஆம் இடத்தில் புதன், சந்திரன் இருப்பதால் விவாகப் பேச்சுகள் வெற்றிகரமாக முடியலாம். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். 4 ஆம் இடத்தில் சூரியன், சுக்ரன் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். அஷ்டமாதிபதி சூரியனோடு 5, 10 இற்கு அதிபதியான சுக்ரன் இணைந்திருப்பதால் தொழில் மாற்றங்கள் தானாக வந்து சேரலாம். நடக்கும் தொழிலில் நண்பர்களால் சில இழப்புகள் ஏற்பட்டாலும் குரு பார்வை இருப்பதால் அதை ஈடுசெய்யும் வாய்ப்பு தானாக வந்து சேரும்.

பொதுவாக இம்மாதம் சிறப்பாக அமையவும், பொருளாதார நிலை உயரவும் நிறைய வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். கோசாரத்திற்கேற்ப வழிபாடு, தெசாபுத்திக்கேற்ற வழிபாடுகளைச் செய்வதோடு ஒவ்வொரு சனிக்கிழமையும் சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபடுவது நல்லது.

### ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 21 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்ரன் செல்கின்றார். 5 ஆம் வீட்டிற்கு அதிபதி சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது ஆதாயம் தரும் தகவல்கள் அடிக்கடி வந்து சேரும். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நிறைவேற்றுவீர்கள். பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக எடுத்த முயற்சி பலன் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். மாங்கையர் வழிப்பிரச்சினை தீரும். மதிப்பும் மரியாதையும் உயரும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும் நேரமிது.

### சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25 ஆம் திகதி சனி பகவான் வக்ரம் பெறுகின்றார். விரயச் சனி வக்ரம் பெறுவதால் விரயத்திற்கேற்ற வரவு வந்துகொண்டே இருக்கும். எந்தக் காரியத்தையும்




பணத்தையும் வைத்துக்கொண்டு தொடங்கா விட்டாலும் பணம் தானாக வந்து சேரும். கொடுத்த வாக்கை ஒருசில சமயங்களில் காப்பாற்ற இயலாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். தன்னம்பிக்கையை குறையவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

### மகர செவ்வாயின் சஞ்சாரம்!

ஏப்ரல் 30 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் மகரத்தில் உச்சம் பெறுகின்றார். இக்காலம் ஒரு இனிய காலம்தான். சொத்துகளால் ஆதாயம் உண்டு. வாங்கிய சொத்தை விற்றுவிட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு, மீண்டும் சொத்து வாங்கும் யோகம் உண்டாகும். வாகனம் வாங்கும் முயற்சி பலன்தரும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். சகோதர ஒற்றுமை உண்டு.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மே 3ஆம் திகதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். சூரியனோடு புதன் இணைவதால் கல்வி விருத்தி மேலோங்கும். கடமையில் இருந்த தொய்வு அகலும். இடம், பூமி சேர்க்கை உண்டு. தாய்வழி ஆதரவு கிடைக்கும். இம்மாதம் வடக்கு நோக்கிய பெண் தெய்வங்களை வழிபாடு செய்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் விரயச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். எந்தச் சமயத்திலும் அநாவசியமாக வாக்குறுதி கொடுக்க வேண்டாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. எந்தப் புது முயற்சியில் ஈடுபட்டாலும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களைக் கலந்து ஆலோசித்துச் செய்வதே நல்லது. பிள்ளைகளுக்கான கடமைகளைச் செய்வீர்கள். இருப்பினும் பிள்ளைகளாலும் உங்களுக்குத் தொல்லைகள் உருவாகலாம். 10இல் குரு இருப்பதால் பணிபுரியும் பெண்களுக்கு பதவி மாற்றங்கள் திடீரென உருவாகும். தாய்வழி ஆதரவு திருப்தியளிக்காது. வரவேண்டிய பாக்கிகள் தாமதப்படும். கோபத்தின் காரணமாக உடன்பிறப்புகளில் ஒருசிலர் உங்களை விட்டுப் விலக நேரிடும். பேச்சில் நிதானம் தேவை. குலதெய்வ வழிபாடும், குரு வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# எனது தந்தை இறந்தது நல்லதே!

## அமைச்சர் அர்ஜுன கவலையுடன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தற்போதைய குடும்ப நிலை மற்றும் கட்சி நிலையை தனது தந்தையான ரெஜ் ரணதுங்க பார்ப்பதற்கு முன்னர், அவர் இறந்தமை நல்லதே என பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் தந்தையாரான ரெஜ் ரணதுங்கவின் 81ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உடும்பொலவில் இடம்பெற்ற அவரது ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொண்டு, கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'எனது தந்தை ஒருபோதும் எமது குடும்பத்தை பிரிக்க விடவில்லை. ஆனால் எமது குடும்பத்தை பிரிக்க சில அரசியல்வாதிகள் சதி செய்கின்றனர். அரசியல் இலாபத்தை அடைவதற்காக, அவர்கள் எமது சகோதரத்துவத்தை பிரிக்க முயற்சிக்கின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் அரசியலிலே பண்டாரநாயக்க குடும்பத்திற்கு பின் ரணதுங்க குடும்பம் செல்வாக்கு செலுத்துகின்றது. எனது தந்தை இறந்தமை நல்லதே. காரணம் தற்போதைய குடும்ப நிலை மற்றும் கட்சி நிலையை அவர் பார்த்திருப்பார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரிக்கவோ அல்லது அதை விட்டு விலகவோ எனது தந்தை என்றுமே முயற்சித்ததில்லை. அவர் கட்சியை பாதுகாக்கவே பெரும்பாலும் உழைத்தார். எனது தந்தை அரசியலில் எவ்வித ஊழலையும் செய்யவில்லை என்பதை எண்ணி அவரது மகனாக நான் பெருமைப்படுகின்றேன்.

எமது குடும்பத்தில் எவ்வித குழப்பங்களும் இல்லை. நாங்கள் வெவ்வேறு அரசியல் கொள்கைகளை மட்டுமே பின்பற்றுகின்றோம். பிரசன்ன ரணதுங்க வேறு அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றார். ருவன் ரணதுங்க இலங்கை சுதந்திர கட்சியின் கொள்கைகளோடு செல்கின்றார். ஆனால் நாங்கள் சரியான நேரத்தில் ஒரே வழியை பின்பற்றுவோம்.

மகிந்த ராஜபக்ஷ எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் அவரைப்பற்றி பெரிதாக கண்டு கொள்ளவில்லை. ராஜபக்ஷர்கள் எனது தந்தையை கடைசி காலம்வரை நாடாளுமன்ற உறுப்பினராகவே வைத்திருந்தனர். அவரது மரணத்தின் போதாவது ராஜபக்ஷக்கள் அவரது உடலுக்கு மரியாதை செலுத்தியமை எண்ணி, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்' எனக் கூறினார். (இ-7)

# காலில் விழுந்தவர் காலாவதியான நூடில்ஸ் என என்னை வர்ணிக்கிறார்-சந்திரிகா கவலை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த மூன்று வருடங்களாக தேசிய அரசாங்கத்தை உடைப்பதற்கும் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகயில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் மகிந்த ராஜபக்ஷவின் கையாட்களால் திட்டமிடப்பட்ட சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக செயற்பட்டவர்கள் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள 16 உறுப்பினர்களுடன் இணையவுள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பதை பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவிடம் கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.


டிலான் பெரேரா மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றம் செல்லாதவர் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி என்னுடைய காலத்தில் காலில் விழுந்து தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம் சென்றவர் டிலான் பெரேரா எனவும் குறிப்பிட்டுள்ளார்.


இன்று தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்ற பின்னர் வேறு யாரோ போடும் தாளத்திற்கு அவர் நடனமாடுகின்றார் ஒரு காலத்தில் என்னை மிகச்சிறந்த அரசியல்வாதி என வர்ணித்த அவர் தற்போது என்னை காலாவதியான நூடில்ஸ் என வர்ணிக்கின்றார் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

காலாவதியான நூடில்ஸ்கள் என வர்ணிக்கப்படுபவர்கள் பத்து பேர் இணைந்தால் உலகையே தலைகீழாக மாற்றி விட முடியும் எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார். 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினாலும் தேசிய அரசாங்கம் தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எமது தனித்துவம்மிக்க கலைகளை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் உழைப்போம்

## தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

கொடிய யுத்தம் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த காலத்திலும் எமது இனத்தின் கலை கலாசாரங்கள் அழிவுறாது பேணிப் பாதுகாத்தவர்கள் நாம். அந்த வகையில் இன்றுள்ள அமைதிச் சூழலில் எமது இனத்தின் வரலாற்று அடையாளங்களையும் கலாசாரங்களையும் மேலும் உறுதி மிக்கதாக வளர்த்துச் செல்ல நாம் அயராது உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் குறித்த பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இனத்திற்கென ஒரு தனித்துவம் உண்டு. அந்தத் தனித்துவத்திற்குள் இருக்கும் எமது இனத்தின் கலை கலாசாரங்கள் உலகுக்கே உதாரணங்களாக இன்றும் திகழ்கின்றன.

ஆனாலும் அழிவு யுத்தம் எமது தேசத்தை மூன்று தசாப்தங்கள் ஆக்கிரமித்திருந்ததனால் எமது கலைகளை வளர்ப்பதில் பல பின்னடைவுகள் காணப்பட்டிருந்தன. ஆனாலும் அந்த யுத்த காலத்திலும் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் தனது அயராத முயற்சியினால் பல்வேறு திட்டங்களை உருவாக்கி எமது இனத்தின் கலை கலாசாரங்களை அழியாது பேணிக்காத்து வந்துள்ளார். இதற்கு யாழ்ப்பாணத்தில் பல சான்றுகள் காட்சியளிக்கின்றன.

அந்தவகையில் கலைகளுடன் கலாசாரத்தையும் வளர்ப்பதற்கு நாம் பேதங்களை மறந்து ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும். இதற்காக எமது கட்சி தொடர்ந்தும் கடுமையாக உழைக்கும் என்றும் தெரிவித்த தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி புங்குடுதீவு பகுதியில் காணப்படும் பற்றைகளையும் புதர்களையும் மக்களுடன் இணைந்து அகற்றி பாதுகாப்பானதும் சுகாதாரம்மிக்கதுமான பகுதியாக மாற்ற நடவடிக்கை எடுப்போம் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித் துளிகள்

## வில்லூன்றி விநாயகர் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய சம்புரோட்சண மஹா கும்பாபிஷேகம் இவ்வாண்டு ஆனி மாதத்தில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னோடியாக எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது.

நாளை 25ஆம்திகதிபுதன் கிழமை அதிகாலை 6.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை அனுஞ்ஞை, வாஸ்து சாந்தி, பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூசை, கலாகர்ஷணம், விசேட கலச பூசை ஆகியன நடைபெற்று பாலாலயத்தில் விம்ப ஸ்தாபனம் நடைபெறும்.

நாளை மறுதினம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் விசேட கலச பூசை இடம்பெறும்.

27ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு விசேட கலச பூசை நடைபெற்று 6.30 மணிக்கு பாலஸ்தாபன அபிஷேகமும் தொடர்ந்து தீபாராதனை முதலியனவும் இடம்பெறும். (இ)

## தவிசாளருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கதிர்காமம் பிரதேச தவிசாளர் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திஸ்ஸமகராம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மே 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளார். (இ-7)

## எட்டுமாத குழந்தையுடன் தந்தை ரயில் முன் பாய்ந்து தற்கொலை

(கொழும்பு)

தந்தையொருவர் தனது 8 மாதக் குழந்தையுடன் ரயிலின் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று குருநாகலில் இடம்பெற்றுள்ளது. குருநாகல், பல்லேகொட்டுவ பகுதியிலே குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலின் முன் பாய்ந்து 30 வயதுடைய தந்தையொருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பல்லேகொட்டுவ- வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு தனது குழந்தையுடன் தற்கொலை செய்துகொண்டுள்ளார். (இ-7)

## தங்கத்திற்கான வரி தேவையற்றது- ரவி



(கொழும்பு)

தங்கத்திற்கு 15 வீத இறக்குமதி வரி விதிப்பது தேவையற்றது என முன்னாள் நிதியமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வட் வரியை குறைப்பதாக நான் வாக்களித்திருந்தேன். தற்போது 9 வீதமாக அதனைக் குறைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

குறித்த 15 வீதமான தங்கத்திற்கான வரி தேவையற்ற வரி. எவ்வித தூரநோக்குமின்றி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது" என கூறினார். (இ-7)

## புத்தாண்டுக் கொண்டாட்டம்

(கரணவாய்)

மதங்களுக்கிடையிலும் கலாசாரங்களுக்கிடையிலும் விழாக்களைக் கொண்டாடுதல் எனும் தொனிப்பொருளில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் சிங்கள, தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தலைவி திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்து சிறப்பிப்பார்.

மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளுடன் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (இ-29)




# குள்ள ராஜா

மங்களபுரம் என்ற ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு அமைச்சரும் இருந்தார். ராஜாவோட உயரம் நாலரை அடிதான். ஆனா அமைச்சரோ ஆறடி உயரம் இருந்தார்.

ராஜா குள்ளமா இருந்தாலும் அதுபற்றி கவலையில்லாம இருந்தார். அவர் விருப்பத்திற்கேற்ப அமைச்சர் நடந்தார். ஒரு முறை ராஜாவும், அமைச்சரும் மாறுவேடத்தில நகர்வலம் போனார்கள்.

அப்போது ஒரு வீட்டில் ஒரு அப்பா, தன் பையனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார்.

“நல்லா குதிச்சு உயரமா ஆகிற வழியைப் பாரு. இல்லேன்னா நம்ம ராஜா போல குள்ளமா ஆயிடுவே” என்று கூறினார்.

இதை கேட்டதும் ராஜாவுக்கு கடுங்கோபம் வந்தது. மாறுவேடத்தை யாருக்கும் காட்டிக்கொடுக்கவும் விரும்பவில்லை.

இருவரும் விடுவிடுவென்று அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அன்றைக்கு முழுவதும் ராஜா கோபமாகவே இருந்தார்.

மறுநாள் காலை ஊர் முழுக்க தண்டோரா போடச் சொன்னார் ராஜா. “இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், நாலரை அடி உயரத்துக்கு மேல ஊருல ஆம்பிளைங்க யாரெல்லாம் இருக்காங்களோ, அவங்க எல்லோரும் உடனடியா ஊரை விட்டு வெளியேறணும்” என்று அறிவிப்பு வெளியிட்டார் ராஜா.

அதனால் ஊருல இருந்த எல்லா பெரியவங்களும் உடனடியா காலி பண்ணிட்டாங்க. அமைச்சர் ஆறடி உயரம் இருந்தாலும் அமைச்சர் மட்டும் காலி பண்ணாம இருந்தார். ஆனால், ராஜா பார்த்தால் திட்டுவாரேன்னு மறைந்து வாழ்ந்து வந்தார். எல்லா பெரியங்களும் வெளியே போயிட்டதால சின்ன பசங்க சில பேரை ஒற்றர்களாகவும், அமைச்சர்களாகவும் ராஜா நியமிச்சார். ஆனா வீரனா இருக்க உயரமும் வேணுமே? அதனால வீரர்கள் மட்டும் கிடைக்கவே இல்ல.



இதெல்லாம் ராஜாவை எப்போ கவிழ்க்கலாம் என்று காத்துக் கொண்டிருந்த எதிரி நாட்டு ராஜாவுக்கு தெரிந்தது. அதனால மங்களபுரம் மேல போர் தொடுக்க போவதாக அறிவிப்பு தந்தார். அத்துடன், தனது வீரர்களோடு ஊரையும் முற்றுகையிட்டார்.

மங்களபுரத்தில் வீரர்கள் இல்லாததால் ராஜாவுக்கு ஒரே கவலை. இந்த நேரத்தில் ராஜாவின் முன்னால் அமைச்சர் அரண்மனைக்கு வந்தார்.

அமைச்சரைப் பார்த்ததும் ராஜாவுக்கு சந்தோசம். ஆனா, வெளியில அதை காட்டிக்காமல் கோபமாக பேசினார். “இப்ப ஏன் இங்க வந்தே?” என்று கேட்டார். “மன்னரே, என் கால் ரெண்டையும் பாருங்க. நான் குள்ளமா இருக்கணும் கிறதால அப்படியே வெட்டிக்கொண்டேன்” என்றார் அமைச்சர்.

ராஜா அப்போதுதான் அமைச்சரின் காலைப் பார்த்தார். கால் குண்டா இருந்தது. ஆனால், கால் முழங்காலை மடிச்சு சின்னதா இருப்பது போல காண்பித்திருந்தார் அமைச்சர். ராஜாவுக்குப் புரிந்தது. அமைச்சரின் நகைச்சுவையை ரசித்தார்.

உடனே வேலையில் சேரும்படி அமைச்சருக்கு ராஜா உத்தரவிட்டார். உடனடியாகக் களத்தில் இறங்கிய அமைச்சர், மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

குள்ளமான சிறுவர்களை எதிரி நாட்டு ஒற்றர்களுக்கு சந்தேகம் வராமல் வெளியே செல்வதற்குப் பயிற்சியளித்தார். அவர்கள் மூலம் ஊரை காலி செய்து விட்டுப் போன வீரர்களுக்கு தகவல் கொடுத்தார்.

வீரர்கள் எல்லோரும் பின்புறமாக அரண்மனையில் குவிந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரி நாட்டு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். அதை தாங்க முடியமால் எதிரி நாட்டுப் படையினர் ஓட்டம் பிடித்தார்கள்.

நாட்டை ஆபத்தில் இருந்து காப்பாற்றியதற்காக அமைச்சருக்கு ராஜா நன்றி தெரிவித்தார். நாட்டை ஆள்வதற்குத் தேவை வீரமும், அறிவும்தான்.

அதை ஒழுங்காகச் செய்வது தான் முக்கியம் என்பதை ராஜா உணர்ந்து கொண்டார். உடனே உயரமானவர்களுக்கு விதித்த தடையை நீக்கினார். எல்லோரும் ராஜாவை வாழ்த்தினார்கள்.




- ❖1704-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை “த பொஸ்டன்” நாளிதழ் வெளியிடப்பட்டது.
- ❖1908-லூசியானாவில் புயல் காரணமாக 143 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖1968-மொரீசியஸ் ஐ.நாவின் உறுப்பு நாடாகியது..
- ❖1981-முதலாவது ஐ.பி.எம். தனி மேசைக் கணனி அறிமுகமானது.
- ❖1993-இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சியம் அமைக்கப்பட்டது.
- 1993 - லண்டன் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.
- ❖2006-நேபாளத்தில் மன்னருக்கு எதிராக இடம் பெற்ற கலவரங்களை அடுத்து 2002 இல் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீள அமைக்க மன்னர் உத்தரவிட்டார்.
- ❖2007-பலாலி இராணுவத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

**பிறப்புகள்**

- ❖1581-வின்சென்ட் தே பவுல், பிரான்சிய மதகுரு, புனிதர் (இ. 1660)
- ❖1820-ஜி.யு.போப், தமிழுக்கு சேவை செய்த அமெரிக்கர் (இ. 1908)
- ❖1924-எஸ்.ஏ.டேவிட், ஈழத்துக் கட்டடக் கலைஞர், காந்தியம் அமைப்பைத் தோற்றுவித்தவர் (இ. 2015)
- ❖1929-ராஜ்குமார், இந்திய நடிகர் (இ. 2006)
- ❖1933-நொபொரு காராசிமா, ஜப்பானிய வரலாற்றாசிரியர், தமிழறிஞர் (இ. 2015)
- ❖1934-எல். கணேசன், தமிழக அரசியல்வாதி
- ❖1937-சூலமங்கலம் ஜெயலட்சுமி, கர்நாடக இசை, திரைப்படப் பின்னணிப் பாடகி.
- ❖1947-ரோஜர் கோர்ன்பெர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்
- ❖1951-தம்பிஐயா தேவதாஸ், ஈழத்து எழுத்தாளர்
- ❖1973-சச்சின் டெண்டுல்கர், இந்தியத் துடுப்பாளர்
- ❖1982-கெல்லி கிளார்க்சன், அமெரிக்க நடிகை, பாடகி
- ❖1987-வருண் தவான், இந்திய நடிகர்

**இறப்புகள்**

- ❖1622-சிக்மரிங்ஞன் பிதேலிஸ், செருமானியப் புனிதர் (பி. 1577)
- ❖1960-மேக்ஸ் வோன் உலோ, நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி. 1879)
- ❖1967-விளாடிமிர் கொமரோவ், ரஷ்ய விண்வெளி வீரர் (பி. 1927)
- ❖1976-மார்க் டோபே, அமெரிக்க-சுவிட்சர்லாந்து ஓவியர் (பி. 1890)
- ❖2011-சத்திய சாயி பாபா, இந்திய குரு (பி. 1926)

**சிறப்பு நாள்**

- ❖ஆர்மீனிய இனப்படுகொலை நினைவு நாள்
- ❖குழந்தைகள் நாள்
- ❖சனநாயக நாள் (நேபாளம்)
- ❖பன்னாட்டு சிற்ப நாள்
- ❖தொழிலாளர் தினம் (பங்களாதேசம்)
- ❖குடியரசு நாள் (காம்பியா)
- ❖உலக ஆய்வக விலங்குகள் தினம்
- ❖தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் (இந்தியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 | 45 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 50 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 45 | 80 | 60 |
| தக்காளி | 40 | 40 | 40 | 20 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 40 | 30 | 60 | 80 |
| கரட் | 100 | 100 | 90 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 20 | 30 | 15 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 80 | 20 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 30 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 150 | 160 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 60 | 60 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 80 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 40 | 160 | 90 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 50 | — | 100 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 90 | 100 | 100 |
| லீக்ஸ் | 200 | 200 | 160 | 110 | 240 | 140 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 15 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 70 | 50 | 20 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 250 | 200 | 300 | 400 |
| போஞ்சி | 100 | 200 | 120 | — | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 40 | — | 50 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 40 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 280 | 200 | 250 | 200 | 240 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 100 | 80 | 30-55 | 60-75 | 80 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 | — | 160 | 120 |
| வெங்காயப்பூ | 120 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | — | 60 | 15 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 45 | — | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | — | 50 | — | 80 | — |

> கோழி மேய்ப்பதாக இருந்தாலும் கொர்னமேந்து உத்தியோகம் வேண்டும்.
>
> – யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஏனோதானோ என்ற மனநிலையில் காலம் கழிகிறது

யாரைப் பார்த்தாலும் குறைகூறுவதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற அளவில் தான் நம் நிலைமையுள்ளது.

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் என அனைத்து அமைப்புகளினதும் பணிகள் திருப்தியாக இல்லை.

மக்களுக்கான சேவைகள் ஒழுங்காக வழங்கப்படவில்லை. உத்தியோகத்தர்கள் பொதுமக்களை அலைக்கழிக்கின்றனர்.

சில அலுவலகங்களுக்குச் சென்றால் பொதுமக்களை ஏன் என்று கேட்கிறார்கள் இல்லை.

அதிகாரிகள் சிலரைச் சந்திக்கவே முடிவதில்லை. அவர்களின் ஆசனங்கள் எப்போதும் வெறுமை.

ஆசனத்தில் அமர்ந்தாலும் பொறுமையில்லை. அடுத்த கணமே அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற நினைப்பில் கதிரையின் நுனியில் குந்தியிருப்பதை மட்டுமே காணமுடிகின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் தாராளமாக முன்வைக்கப்படுகின்றன.

இவைதவிர வெளிக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் போன்றவர்களின் தனிநபர் கோவைகள் சீரற்றுள்ளன.

உரிய காலத்தில் உரிய பதவி உயர்வுகள் சம்பள ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் உளரீதியில் பாதிக்கப்படுகின்றனர்.

இவற்றுக்கு மேலாக உயர் அதிகாரிகளுக்குக் கடிதங்கள் எழுதினால் அதற்குப் பதில் இல்லை.

அவ்வாறு பதில் கடிதம் வந்தாலும் காலம் தாழ்த்தி உரிய விளக்கமின்றி அந்தக் கடிதங்கள் உள்ளதென ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இவையெல்லாம் எப்போது நிவர்த்திக்கப்படப் போகின்றன என்ற கேள்வி பதிலற்றுக் கிடக்கிறது.

இவை ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாண செயலகத்துக்கு அண்மையில் இருக்கும் மோட்டார் போக்குவரத்து சாரதிகளுக்கான மருத்துவ பரிசோதனை நிலையத்துக்குச் செல்கின்றவர்களின் குருதி வகை மாறி மாறிப் பதியப்படுகின்றன எனப் பாதிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர்.

இவை பத்திரிகைகளில் வெளிவந்தபோதிலும் அது தொடர்பில் யாரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

ஒருவரின் குருதி மாதிரியை பிழையாகப் பதிவு செய்வதன் விளைவு எத்துணை பாரதூரமானதென்பதைக்கூட உணர்ந்து கொள்ள முடியாதவர்களாக நம்மவர்களின் மனநிலை உள்ளது எனும்போது இது கலிகாலம் என்று கதையை முடித்து விடுவதுதான் புத்திசாலித்தனமென்றாகிறது.

எதுஎவ்வாறாயினும் சாமானிய மக்களை அலைக்கழிப்பது; அவர்களுக்குரிய சேவையைச் செய்யாமல் காலம் கடத்துவது என அனைத்தும் பாவச் செயலாகும் என்பதை உணர்ந்து கொள்வது இப்பிறவியின் பேற்றைப் பாதுகாக்க உதவும்.

அதேசமயம் மிகுந்த அர்ப்பணிப்போடு சேவை செய்கின்றவர்களின் பணிநிலைகூட, மந்த செயற்பாட்டாளர்களால் மழுங்கடிக்கப்படுவது வேதனையிலும் வேதனை.

# அரசிலிருந்து விலகிய அனைவரும் மகிந்தவின் கைக்கூலிகள்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து விலகுவதாக 'அறிவித்துள்ள 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கைக்கூலிகளென, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

"பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய குறித்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மகிந்தவின் சதித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள்.

இதனால் குறித்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு நல்லாட்சியை குழப்ப மகிந்த நினைத்தார். ஆனால் அதுவும் அவருக்கு பாரிய தோல்வியில் முடிந்தது.

இருப்பினும் எதுஎவ்வாறாயினும் எமது தேசிய அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது" என அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (ம)

## பத்திரிகை வாங்கச் சென்ற முதியவர் விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற போது மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நாவற்குழி - மன்னார் ஏ-32 வீதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காலையில் பத்திரிகை வாங்குவதற்காக கடைக்குச் சென்று கொண்டிருந்தவேளையில் மோட்டார் சைக்கிளொன்று மோதியதிலே இந்த முதியவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மாலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் வேலுப்பிள்ளை மார்க்கண்டு (வயது 76) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-7)

## திருட முற்பட்ட இளைஞன் மடக்கிப்பிடிப்பு

### மயக்கமடைந்த நிலையில் பொலிஸில் ஒப்படைப்பு

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள வீடுகளில் திருட முயற்சி செய்த இளைஞர் ஒருவர் அப்பகுதி இளைஞர்களிடம் வசமாக மாட்டியுள்ளார்.

இளைஞர்களின் மிரட்டலுக்கு பயந்து மயக்கமடைந்த நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று கோப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் இராஜவீதியில் அமைந்துள்ள மூன்று வீடுகளுக்கு சென்று நேற்றுக் காலை குறித்த இளைஞர் சந்தேகத்திற்கிடமான முறையில் செயற்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய குறித்த இளைஞரை அப்பகுதி இளைஞர்களும் அவதானித்துள்ளனர். இதேவேளை குறித்த இளைஞர் இறுதியாக அப்பகுதியில் தனியாக இருந்த வீடு ஒன்றினுள் இறங்கி திருடுவதற்கு முயன்றுள்ளார்.

அப்போது சந்தேகம் கொண்ட அப்பகுதி இளைஞர்கள் குறித்த இளைஞரை மடக்கி பிடித்து மிரட்டியுள்ளனர. அதற்கு பயந்த இளைஞர் அந்த இடத்தில் மயங்கியுள்ளார். உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அப்பகுதிக்கு வந்த பொலிஸார் குறித்த இளைஞரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு (NDES) விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவில் உள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உ/த பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் 31.05.2018ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

இது தொடர்பான விபரங்களை இல.2068 (20.04.2018) வர்த்தமானியில் பார்வையிடலாம். அத்துடன் www.iet.edu.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் பெறலாம் என மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (இ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் தருமபுரம், புளியம்பொக்கணை, விசுவமடு, தேராவில், விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அட்டம்பஸ்கட கிராமம், மதவுவைத்தகுளம், தவசிக்குளம் கிராமம், உக்குளாங் குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### நான்கு வகை துறவு நிலைகள் எவை?

வாழ்க்கையில் மனிதன் நான்கு துறவு நிலைகளைக்கடைப்பிடிக்க வேண்டும். அவை பிரமச்சரியம், குடும்ப வாழ்க்கை, வனப்பிரஸ்தம், சந்நியாசம், ஆகியவையாகும். இந்த நான்கு துறவு நிலைகளையும் ஒரு ஆண் மகன் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்று மனுதர்மம் கூறுகிறது.

பிரமச்சரியம் என்பது கல்வி கற்கும் காலமாகும். அதை வெற்றிகரமாக பூர்த்தி செய்துவிட்டால் குடும்ப வாழ்க்கையைத் தொடங்கலாம். ஆண் மகன் அவனுக்குப் பொருத்தமான அழகான நல்ல குணவதியான கன்னியைத் தன் வாழ்க்கைத் துணையாகக் கொள்ள வேண்டும். பெண் தன் கணவன் அவனது தர்மத்தின்படி நடப்பதற்கு உதவிட வேண்டும். பெண்கள் அதற்குத் தடையாக இருக்கக் கூடாது.

(தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அகத்தூய்மை இல்லாவிட்டால் புறத்தூய்மையால் பயனேதும் இல்லை. ஆன்மிக ஒளியற்ற மனிதன் எவ்வளவு அழகுடையவனாக இருந்தாலும் விலங்குக்குச் சமமாவான்.
- மனத்தூய்மை பெற்று விட்டால் நம்மிடம் உயர்குணங்கள் மேலோங்கும். மனம் ஒருமுகப்படும். உற்சாகம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும்.
- இறைவன் பெரிய காந்தக்கல்லைப் போல இருக்கிறார். நாம் அனைவரும் இரும்புத்துகள் போல அவரால் கவரப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.
- வாழ்நாளில் நாம் செய்ய வேண்டிய வேலை என்ன தெரியுமா. காந்தக் கல் போல இருக்கும் இறைவனை அணுகிச் செல்வது மட்டும் தான்.
- இறைவனோடு இரண்டறக்கலந்து விட்டால் வாழ்வில் இருக்கும் போராட்டம், கொந்தளிப்பு அனைத்தும் நீங்கி அமைதி பெற்று விடுவோம்.
- கடவுள் மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உண்மையானதாக இருக்குமானால், உங்களுடையது என கருதுகின்ற அனைத்தும் அவருடையது என்று நம்புங்கள்.

# கடலன்னை வெற்றிக்கிண்ணம் புதுக்குடியிருப்பு சுப்பராங் அணி வசம்



வடமராட்சிக்கிழக்கில் கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தினரால் வடமாகாணம் உள்ளடங்கலாக நடத்தப்பட்ட கடலன்னை வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் புதுக்குடியிருப்பு சுப்பராங் விளையாட்டுக் கழகத்தினர் கடலன்னை கிண்ணத்தைக் கைப்பற்றினார்கள். 39 விளையாட்டுக் கழகங்கள் பங்குகொண்ட இப் போட்டித்தொடரில் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற மன்னார் தேவன்பிட்டி சென் சேவியர் விளையாட்டுக் கழகம் மற்றும் புதுக்குடியிருப்பு சுப்பராங் விளையாட்டுக் கழகமும் ஆகும். இவ் இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை மாலை கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இவ் இரு அணிகளும் விளையாட்டின் போது கோல்கள் எதனையும் போடாததனால் தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் புதுக்குடியிருப்பு சுப்பராங் அனியினர் தேவன்பிட்டி சென் சேவியர் அணியை 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டுகிண்ணத்தை தனதாக்கியது. (க-64)

# புதிய விடியல் கால்பந்தாட்டத்தொடர் அரையிறுதிக்கு தெரிவானது யங்ஹென்றிஸ்



டான் தொலைக்காட்சியின் அனுசரணையில், யாழ். மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து, யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் புதிய விடியல் என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுப்போட்டியானது நடைபெற்று வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று, மயிலங்காடு ஞானமுருகன், புங்குடுதீவு நசரேத், குருநகர் பாடும்மீன், அரியாலை ஐக்கியம், இளவாலை யங்ஹென்றிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், ஊரெழு றோயல், நவிண்டில் கலைமதி ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

இதில் மூன்றாவது காலிறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் இளவாலை யங்ஹென்றிஸ்அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. இதில் முதற்பாதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணியின் றெக்ஸன் முதல் கோல் போட்டார்.

முதற்பாதியாட்டம் அந்தக் கோலுடன் நிறைவுக்கு வந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிக கோல்கள் எதுவும் அடிக்கப்படவில்லை.

முடிவில் யங்ஹென்றிஸ் அணி, 1:0 என்ற கோல்கள் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (க-26)



பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் வல்வை அணி நெடியகாடு அணியுடன் மோதி 15:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (க)

# கோல் மழையால் நனைந்தது மைதானம் அரையிறுதியில் ஊரெழு றோயல் அணி



டான் தொலைக்காட்சியின் அனுசரணையில், யாழ்.மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து, யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் புதிய விடியல் என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிக்கு ஊரெழு றோயல் அணி உள்நுழைந்தது.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுப் போட்டியானது நடைபெற்று வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று, மயிலங்காடு ஞானமுருகன், புங்குடுதீவு நசரேத், குருநகர் பாடும் மீன், அரியாலை ஐக்கியம், இளவாலை யங்ஹென்றிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், ஊரெழு றோயல், நவிண்டில் கலைமதி ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

இதில் நான்காவது காலிறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. தொடக்கம் முதல் ஊரெழு றோயல் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற்றது.

தொடர்ச்சியாக இரண்டு கோல்களை றோயல் அணி போட்டது. முதற்பாதியாட்டத்தில் றோயல் அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் றோயல் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற தொடர்ச்சியாக இரண்டு கோல்களை அடித்தது.

இதன் பின்னர் நவிண்டில் கலைமதி அணி, தமது அணிக்கான முதலாவது கோலை அடித்தது.

எனினும், இறுதி நேரத்தில் மேலும் ஒரு கோலை அடித்த றோயல் அணி, ஆட்டத்தை தம்வசப்படுத்தினர்.

முடிவில் றோயல் அணி, 05:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

றோயல் அணி சார்பாக தர்மகுலநாதன் கஜகோபன் 3 கோல்களையும், நிதர்சன், பிரசன்னா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் அடித்தனர்.

இன்று நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (க-26)

# சமுர்த்தி வங்கியின் விளையாட்டு விழா









ஆவரங்கால் சமுர்த்தி வங்கியின் வருடப்பிறப்பினை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் கிழக்கு ஆடி முருகன் ஆலயத்தடியில் வாங்கி முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது.

விருந்தினர்களாக பிரதேச செயலக முகாமையாளர்கள் வருகை தந்திருந்தனர். ஆலயத்திலிருந்து விருந்தினர் அழைத்துவரப்பட்டு போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. சிறுவர்களிற்கான பணிஸ் சாப்பிடுதல்,ஆண் பெண்களிற்கான மெதுவான சைக்கிள் ஓட்டம், தயிர் முட்டி அடித்தல், கயிறிழுத்தல், சங்கீத கதிரை போன்ற விளையாட்டுகள் நடைபெற்றன. போட்டிக்கான ஒழுங்கமைப்பினை ஆவரங்கால் கிழக்கு சமுர்த்தி சங்கங்கள் ஒழுங்கமைத்திருந்தன. வங்கிக்கு உட்பட்ட அனைத்து பிரதேச மக்களும் கலந்து கொண்டனர். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்ற நாமகள் இளைஞர் கழக அணியினர். (க)

## சிவன் ஆலயத்தை...

தினை இடித்து தரைமட்டமாக்கியதுடன் அவ் ஆலயத்தின் சான்றுப் பொருட்களை அழித்துள்ளதுடன் அப்பகுதியில் பௌத்த விகாரை ஒன்றினை இராணுவத்தின் 64ஆவது படைப்பிரிவினர் மிகவும் மும்முரமாக மேற்கொண்டு வருவதாகவும் இவ்விடயம் அப்பகுதியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் காணியின் உரிமையாளர் தெரிவிக்கையில்,

கற்சிலைமடுப்பகுதியில் பரம்பரையாக வசித்து வருகின்றேன். 1921ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உறுதிக்காணி யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு கடந்த 2009ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் இராணுவம் எனது காணியை கைப்பற்றி இராணுவ முகாமினை அமைத்துள்ளது. எனது காணிக்குள் மிகவும் பழமைவாய்ந்த சிவன் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது. இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட எனது காணியிலிருந்த சிவன் ஆலயத்தை பைக்கோவினால் உடைத்து தடைமட்டமாக்கியதுடன் அதில் ஆலயம் இருந்தவற்றுக்கான தடயங்களையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் காணப்பட்ட வெள்ளரசு மரத்தடியில் பௌத்த விகாரையை அமைத்துள்ளனர். 2009ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு அப்பகுதியைச் சுற்றி 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனினும் கடந்த 2013ஆம் ஆண்டு புராதன திணைக்களத்தில் (தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தில்) பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதேவருடம் 6ஆம் மாதம் வர்த்தமானியில் புராதன திணைக்களத்திற்குச் சொந்தமான பகுதியாக குறித்த எனது காணி அறிவிக்கப்பட்டு விட்டது.

இதேவேளை தற்போது ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு செல்லும் வீதியிலுள்ள 64 ஆவது படைப்பிரிவு நிறைய மாற்றங்களை மேற்கொண்டுள்ளதுடன் பழைமைவாய்ந்த புராதனக்கல்லுகளை எடுத்துவந்துள்ளதுடன் புத்தர் சிலையை முன்பக்கத்தில் நிறுத்தி அப்பகுதியில் தொடர்ந்து திட்டமிடப்பட்டு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக புராதனத்திணைக்களத்திடம் வினவியபோது அது புராதன திணைக்களத்திற்குரிய பகுதி எனவும் தெரிவித்துள்ளதுடன் வேறு எவரையும் அப்பகுதியிற்குள் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர். கடந்த 1921ஆம் ஆண்டு உறுதி எழுதப்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு எழுதப்பட்ட வரைபடத்தில் இந்து ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், இந்து கலாசார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளனர். இவ்வளவு காலமாகவும் ஏன் இவற்றைக் கண்டு பிடிக்கவில்லை புராதன திணைக்களம் எனவும் காணி உரிமையாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே இது திட்டமிடப்பட்டு அப்பகுதியிலிருந்த சிவன் ஆலயத்தினை இடித்து தரைமட்டமாக்கியதுடன் அவ்விடத்திலிருந்த தடயங்களையும் அகற்றி அப்பகுதியில் பௌத்த விகாரை ஒன்றினை அமைப்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரியும் சட்டத்தரணியுமான லீனஸ் வசந்த ராசாவிடம் கேட்டபோது, தொடர்புபட்ட இராணுவம், புராதன திணைக்களத் தரப்பினரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு இடம்பெற்று வருகின்றது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் காணி உரிமையாளர் வழங்கிய முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (ம-281)

## வர்த்தமானியில்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று கையொப்பமிட்டார்.

அதனடிப்படையில் நாடாளுமன்றில் அடுத்த அமர்வு வரும் மே 8ஆம் திகதி பிற்பகல் 2.15 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற அமர்வை கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு முதல் வரும் மே 8ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இதனால் கடந்த 19ஆம் திகதி நடைபெறவிருந்த நாடாளுமன்ற அமர்வு ஜனாதிபதியால் முடக்கப்பட்டது. நாடாளுமன்ற ஒழுங்கு விதிகளின் படி சமர்ப்பிக்கப்பட்டிருந்த சட்ட வரைபுகள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகள் அனைத்தும் செல்லுபடியாகின.

இந்த நிலையில் ஜனாதிபதியால் அடுத்த சபை அமர்வுக்கான அழைப்பு நேற்று வர்த்தமானி ஊடாக விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசின் தலைவர் என்ற அடிப்படையில் மே 8ஆம் திகதி சபை அமர்வை கொள்கை விளக்க உரையுடன் ஜனாதிபதி ஆரம்பித்துவைப்பார்.

இதேவேளை, கூட்டு அரசுக்குள் ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து நாடாளுமன்றை ஜனாதிபதி முடக்கினார் எனத் தெரிவிக்கப்பட்ட போதும், அரசு அதனை நிராகரித்திருந்தது. (ம)

## துவிச்சக்கரவண்டி...

ளானதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற நபர் ஆபத்தான கட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் ஆனைப்பந்தி சந்தியில் நடைபெற்றுள்ளது.

துவிச்சக்கர வண்டியில் வீதியை கடக்க முற்பட்ட ஒருவரையே டிப்பர் இவ்வாறு மோதித்தள்ளியுள்ளது. இதில் படுகாயமடைந்த நபரை வீதியில் கூடியவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இவர் ஆபத்தான நிலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இந்த விபத்து சம்பவத்தால் நேற்று இரவு அப்பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. (ம-4,9)

## இ.போ.ச சாரதி, நடத்து...

மான பேருந்தும் தனியார் பேருந்தும் வீதியில் போட்டி போட்டு மிக வேகமாக பயணித்த வேளை, வீதியால் வந்த மாணவன் "என்ன என்று ஓடுறாய்?" என சாரதியிடம் கேட்டுள்ளார். அதன்போது சாரதி மாணவனுக்கு திரும்ப பேசியுள்ளார். மாணவனும் பதிலுக்கு பேச வாய்த்தர்க்கம் முற்றியதை அடுத்து சாரதி , நடத்துநர் மற்றுமொரு நபர் ஆகியோர் இணைந்து மாணவன் மீது தடி மற்றும் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர்.

அதனை அடுத்து அந்த இடத்தில் நின்றவர்கள் மற்றும் பேருந்தில் இருந்தவர்கள் மாணவனை தாக்குதலில் இருந்து காப்பாற்றியுள்ளனர்.

இச் சம்பவத்தினால் காயமடைந்த இளைஞன், இ.போ.ச சாரதி, நடத்துநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-250,281)

## கவனவீனமாக...

யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த வழக்கில் அரச தரப்பாக மாற்றப்பட்டவர்கள் என தெரிவித்த இருவரும் மன்றில் சாட்சியமளிக்கையில் தாம் அரசதரப்பாக மாற வில்லை எனவும் இச் சம்பவம் தொடர்பாக எவரையும் தமக்கு தெரியாது என தெரிவித்தனர்.

குறித்த வழக்கில் ஆதாரமாக இணைத்த வாள் ஒன்று வேறு ஒரு வழக்கில் இணைக்கப்பட்ட சான்றுப்பொருள் என்றும் மன்றில் தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த வழக்கு தொடர்பாக பொலிஸ் பொறுப்பதிகாரி பதிவேடு ஒன்றை வைத்து மன்றில் சாட்சியம் அளித்தார். அது அப் பதிவேடு வேறு ஒரு வழக்கு தொடர்பானது என தெரியவந்தது.

இவற்றை அவதானித்த நீதவான் பொலிஸ் பொறுப்பதிகாரியை எச்சரிக்கை செய்ததுடன் வழக்குகள் தொடர்பான விசாரணைகளின் போது மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும். கவனவீன முறையில் செயற்பட்டமை தொடர்பாக கடும் எச்சரிக்கை செய்திருந்தார்.

அத்துடன் குறித்த வழக்கில் போதிய ஆதாரங்கள் இல்லை என தெரிவித்து வழக்கில் இருந்து 7 சந்தேக நபர்களையும் நீதவான் விடுதலை செய்துள்ளார். (ம-9)

# முதலீட்டு வாய்ப்புக்களை கண்டறிய பாகிஸ்தான் குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாக கண்டறிவதற்காக பாகிஸ்தானிய நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன், அவர்கள் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அவர்களின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

பாகிஸ்தானின் முன்னணி நிறுவனங்கள் சிலவற்றின் பிரதிநிதிகள் இந்த குழுவில் உள்ளடங்கியிருப்பதுடன், சுகாதாரம் வீடமைப்பு, சுற்றுலா மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப துறைகளில் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள தாம் தயாராக உள்ளதாக அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

மேலும் அதிவேகப் பாதை நிர்மாணம் மற்றும் பெற்றோலிய வளத்துறையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் உலகின் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன மருத்துவமனை ஒன்றினை இலங்கையில் நிர்மாணித்தல் தொடர்பாகவும் சுற்றுலா நகரங்கள் இரண்டினையும் குறைந்த செலவிலான புதிய வீடமைப்பு பகுதிகளை நிர்மாணித்தல் தொடர்பில் முதலீடுகளை மேற்கொள்ளவும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் மலிக் சமரவிக்கிர, தேசிய பொருளாதார சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் லலித் சமரகோன் மற்றும் நிதி அமைச்சினதும் இலங்கை முதலீட்டு சபையினதும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இச்சந்தர்ப்பத்தில் பங்குபற்றினர். (ம)

## சிறிது காலத்தில் நாடு விற்கப்படும் வாசுதேவ நாணயக்கார

நாடு தனியார்மயப்படுத்தப்பட்டு வருகின்றமையால் இன்னும் சிறிது காலத்தில் முழு நாடும் விற்கப்பட்டுவிடுமென ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு, எகலியகொட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் மீது மிகவும் அக்கறை கொண்டவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டின் சொத்துக்கள் தனியார் மயப்படுத்தப்பட்டு வரும் செயற்பாட்டுக்கு அவர்கள் ஒருபோதும் துணை நிற்காமல் அதற்கு எதிராக குரல் கொடுத்து தடுக்கும் செயற்பாட்டையே முன்னெடுப்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம)

## நீரில் மூழ்கி ரஷ்ய பிரஜை பலி

(காலி)

காலி, ஹிக்கடுவை வேவெல கடற்பரப்பில் நேற்று நீராடிக்கொண்டிருந்த ரஷ்ய பிரஜை கடலில் மூழ்கி பலியானதாக ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

58 வயதான இந்த ரஷ்ய பிரஜை கடல் அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். அங்கிருந்த உயிர் காப்பு பிரிவினர் அவரை காப்பாற்றி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்திய சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

## இனப்பிரச்சினை தீர்வு...

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது கொள்கை விளக்கவுரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மே மாதம் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் நிகழ்த்தவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்து ஜனாதிபதி நிகழ்த்தவுள்ள சிம்மாசன உரையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் புதிய அரசியல் யாப்புத் தொடர்பாக, முக்கியமான தகவல்களை வெளியிடுவார் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து 16 உறுப்பினர்கள் வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள நிலையில், எட்டாவது அமர்வை ஜனாதிபதி கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவுடன் ஒத்திவைத்தார்.

மே மாதம் எட்டாம் திகதி ஆரம்பமாகவுள்ள புதிய ஒன்பதாவது அமர்வு, நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது அமர்வாகும். இந்த நிலையில் ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தவிர்க்கும் நோக்கில், உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

ஆனாலும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு செல்வது குறித்து இரு கட்சிகளும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

எவ்வாறாயினும் 2020ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தை செயற்படுத்துவது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் இணங்கியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதி எட்டாம் திகதி நிகழ்த்தும் சிம்மாசன உரை, விவாதத்திற்கு விடப்படும் என நாடாளுமன்ற தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிம்மாசன உரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குதிரைப் படையணியுடன் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து சபைக்கு அழைத்துச் செல்லப்படுவார். சபா மண்டப வாசலில் ஜனாதிபதியை சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தின் பிரதம கொறடா ஆகியோர் வரவேற்பர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அமைச்சர்களை குறைக்க...

ளின் எண்ணிக்கையை 43ஆக குறைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த அமைச்சரவை மறுசீரமைப்பின் போது 48 அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட நிலையில், அண்மையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அவர்களில் 6 பேர் பதவி விலகியுள்ளனர்.

இந்நிலையில், புதிய அமைச்சரவையில் 49 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களை நியமிப்பதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொண்டிருந்த நிலையில், அதனை 43ஆக குறைக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பாக அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதோடு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம)

## மின்கம்பத்துடன்...

மான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்.தென்மராட்சி ஏ35 வீதியில் நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் இருவர் பயணித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாக மின் கம்பத்துடன் மோதியுள்ளது.

சம்பவத்தில் கட்டப்பிராயைச் சேர்ந்த 23 வயதுடைய விஜயரத்தினம் பிரசாத் என்ற இளைஞர் உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த 27 வயதுடைய குணராசன் திருக்குமரன் என்ற இளைஞர் கவலைக்கிடமான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-4-9)

## சிங்கள மாணவர்...

அங்கு புத்தர் சிலை ஒன்றினை வைப்பதற்காக அதற்கான கூட்டினை நேற்று அமைத்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறாது மாணவர்கள் மேற்கொண்ட இம்முயற்சியை பல்கலைக்கழக நிர்வாகம் தடுத்து நிறுத்தியுள்ளது. இதன்போது சிங்கள மாணவர்களால் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது.

இருப்பினும் அவர்கள் புத்தர் சிலை வைப்பதற்கான கூட்டினை அங்கிருந்து எடுத்துச் சென்றுள்ளனர். இதனையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதுடன் சிங்கள மாணவர்கள் பார்க் வீதியில் அமைந்துள்ள வளாகத்தின் அலுவலகத்தினை முற்றுகையிட்டனர்.

இதனால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் வவுனியா வளாகமும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்டபோது, யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள் சிலர் அனுமதியின்றி பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் புத்தர் சிலை ஒன்றை வைப்பு செய்ய முயன்றனர்.

ஏற்கெனவே நான்கு மதத்தவர்களும் வழிபாடு செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் சிலர் பல்கலைக்கழக அனுமதி பெறாது ஒரு இடத்தில் புத்தர் சிலை வைக்க எடுத்த முயற்சி மாணவர்கள் மத்தியில் குழப்பத்தை தோற்றுவிக்கக் கூடியதாக இருந்தது.

இதனால் அதனை தடுத்தோம். அதன்போது மாணவர்களால் எமக்கு அச்சுறுத்தல் விடப்பட்டது. இருப்பினும் தற்போது சட்ட முரணாக மாணவர்கள் மேற்கொண்ட முயற்சி தடுக்கப்பட்டதுடன் ஏற்பட்ட பதற்றநிலையையடுத்து வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. இதேவேளை விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களையும் வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-250-281)

## முல்லையிலிருந்து...

சிவநேசன் கஸ்தூரி (வயது15) என்னும் சிறுமியே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்த குறித்த சிறுமி மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் குறித்த சிறுமி தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் முள்ளியவளையில் வசிக்கும் குறித்த சிறுமியின் தாயார் சிறுவர் பாதுகாப்பு பிரிவினரிடம் தனது 15 வயது மகளை கண்டுபிடித்து தரும்படி கோரிக்கை விடுத்துள்ள நிலையில், சிறுமியை தேடும் பணிகளில் கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-4)

## நீதியரசர்களாக...

மேல் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.சமயவர்தன மற்றும் மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி அர்ஜுன ஒபேசேகர ஆகியோரே இவ்வாறு நேற்று ஜனாதிபதி முன்னிலையில் புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்க இவர்கள் இருவரின் பெயர்களையும் அரசியலமைப்புச் சபை ஜனாதிபதிக்கு பரிந்துரைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 13 பேர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். அவர்களுக்கான நியமனத்தை பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அடுத்தவாரம் வழங்கிவைப்பார் என அறியமுடிகிறது.

அத்துடன், மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான இடமாற்றங்களும் பிரதம நீதியரசரால் வழங்கப்படும் எனவும் தெரிய வருகிறது. புதிதாக மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் பெறுவோரில் தமிழ் பேசும் மூவர் உள்ளடங்குகின்றனர்.

மாவட்ட நீதிபதிகள் திருமதி சிறிநிதி நந்தசேகரன், எம்.என்.என். அப்துல்லா மற்றும் மூத்த அரச சட்டவாதி சூசைதாஸன் ஆகியோரே இவ்வாறு மேல் நீதிபதிகளாகின்றனர். (ம)

## பேருந்து விபத்து...

அதில் பயணித்த 29 பேரும் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வைத்தியசாலையி அனுமதிக்கப்பட்டோரில் 4 பேர் பெண்களும் 2 சிறுவர்களும் 23 ஆண் களும் அடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

பேருந்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறே இவ்விபத்து நேர்ந்தமைக்கான காரணமாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவ்விபத்து தொடர்பில் நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## நிலக்கீழ் பதுங்கு...

சீமெந்துக் கொங்கிறீட் தென்பட்டுள்ளது சந்தேகம் கொண்ட உரிமையாளர் அருகில் இருந்த இராணுவ முகாமிற்கு தகவல் வழங்கியதனை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற இராணுவத்தினர் குறித்த காணியில் இருப்பது விடுதலைப் புலிகளின் நிலக்கீழ் பதுங்கு குழி என்பதனை உறுதி செய்துள்ளனர்

குறித்த பதுங்கு குழியானது சுமார் 35 அல்லது 45 அடி நிலமட்டத்தில் இருந்து கீழ் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-312)


நிரந்தர வேலைவாய்ப்பு

அரச அங்கிகாரம் பெற்ற எமது Everest (PVT) Ltd ஆனது கிளிநொச்சியில் புதிய கிளையினை நிர்மாணித்துள்ளது. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேலும் புதிய கிளைகளை நிறுவவுள்ளது.

அதற்கான வேலையாட்கள் பின்வரும் நியந்தனைக்கு அமைய கோரப்படுகின்றது.

தரம் : 10 - O/L, A/L, Diploma

உடன் தொடர்பு கொள்ளுங்கள் (C-2384)

தொடர்புகளுக்கு : 077 1717278, 077 9856671

Techno World

(வெலிங்டன் சந்தி - லிங்கன் கூல்பார் அருகாமை- யாழ்)

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2020 Paper Class- வினாத்தாள் வகுப்பு

| பாடங்கள் | திங்கள் | புதன் | வெள்ளி |
|---|---|---|---|
| SFT | அடிப்படை கணிதம் | அளவீட்டுக் கருவிகள் | அடிப்படை கணிதம் |
| E-Tec | பட வரைதல் | படவரைதல் | படவரைதல் |
| Bio-Tec | வானிலை | வானிலை | வானிலை |

A/L 2020 மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
28.04.2018 சனிக்கிழமை காலை 8.00 மணி (C-2386)

தொடர்பு : 077 1703549

எதிர்வரும் 28-ம் திகதி நடைபெறும் வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் தெரிவு பரீட்சையை முன்னிட்டு இறுதித் தயார்ப்படுத்தல் வகுப்புக்கள் (C-2385)

நாள் கட்டணத்துடன்

புதன், வியாழன் வெள்ளி 25,26, 27.04.2018
2.30pm - 5.30pm

கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 843 5224

சாவகச்சேரியில்....

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்

அருள்
இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடியில்....

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்

அருள்
இல.01, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில், நெல்லியடி.
076 443 1576

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்: www.ambafrance-lk.org (3738)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

SB Travels and Tours (PVT) Ltd

விமான ரிக்கட்களின் நேரடி முகவராக செயற்படும் SB Travels and Tours (PVT) Ltd தற்போது சென்னை சென்றுவருவதற்கு ஆரம்பவிலையாக 18,800/- இல் இருந்து விமான ரிக்கட்களை வழங்கி வருகின்றது. (இப்போதே எமது நிறுவனத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிந்து கொள்ளுங்கள்.) மற்றும் இந்தியாவிற்கான வீசாவினை நேரடியாக எமது நிறுவனத்தினூடாகவே விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு (C-2381)

021 2228555, 021 2229555 - Jaffna
021 2227666 - Nallur
011 2540280 - Colombo 15
011 2333322 - Colombo 13
011 2361711 - Colombo 06

உடனடி வேலை வாய்ப்பு

பதவி :- முகாமையாளர்

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்

தகுதி :- பட்டதாரி / ஆங்கில அறிவு அவசியம்
வயது 40 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

V2 TRAVELS (அ-2387)

49A, சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ். பொது நூலகம் முன்னால்)
0768226241

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550/=Kg
ஜேர்மனி - 700/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு 0768226240

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

- 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
- வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்

சகல நாடுகளுக்குமான online visa விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

UK - 550/=
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 1000/=

திருமுருகன் கொம் நெற்

216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு அருகாமையில் அமைந்துள்ளது) (3734) 0777554529

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNB வங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS 208A, Galle Road, Wellawatte.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.